
# சிரித்திரன்



மெயில்வாகனத்தார்: ஜீவகாருண்யம் நம்மண்ணில் இருக்கத்தான் செய்யுது.

ஒய்யப்பங்கங்காணியார்: இருக்கும் இருக்கும்!

மெயில்வாகனத்தார்: ஒரு ஜவுளிக் கடைக்காரனிடம் எல்லாத்தையும் பறித்துப்போட்டு ஒரு சாண் துண்டு வெட்டிக்குடுத்தாங்கள் மானம் காப்பாற்ற உடுப்பதற்கு.



மாப்பிளே கரடியாக இருக்கே!

கரடியாக இருந்தாலும் கராட்டி தெரியும். போடுற நகை நட்டைக் காப்பாற்றுவன்.

ஒக்டோபர் 1977

விலை சதம்

75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''எந்நேரமும் நகை முகமாகக் காட்சியளிக்கிறாயே! வாழ்க்கையில் அவ்வளவு சந்தோஷமா?''

''லலிதா நகைகள் அணிந்தால் முகத்தில் நகைக்கே குறைவில்லை.''

## உங்கள் தங்க, வைர நகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்;

# லலிதா ஜூவலறி

உரிமையாளர்:

**செல்லையா இந்திரசித்து**

**இல. 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாய்க்குப் பின் தாரம்

மகனின் திருமணத்தை முடித்துவிட்டுப் பந்தலில் இருந்து வெளிவந்த எனது சிநேகிதி வெகு குதூகலமாகக் காணப்பட்டாள்.

''மகனின் கல்யாணம் முடிந்த சந்தோஷம் முகத்தில் தெரிகிறது'' என்றேன்.

''மகனை விழித்திருந்து காத்திருக்கிற பொறுப்பை மருமகளுக்கு ஒப்படைத்தாயிற்று'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தாள் அவள்.

## சங்கீத வித்துவான்

திறந்த வெளியரங்கில் சங்கீத வித்துவான் தனது வித்துவத் தன்மையையெல்லாம் காட்டிப் பாடிக் கொண்டிருந்தார்.

ஆனல் ரசிகர் கூட்டமோ கொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்து போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது பாடகர் முன்பு ஒருவருமில்லை; ஒரு மாட்டைத் தவிர. மாடாவது தனது இசையின் நுட்பங்களை ரசிக்குதே என்று தொடர்ந்து பாடினர். பாடி முடிந்ததும் ரசிகனை மாட்டை அவர் தட்டிக்கொடுத்துவிட்டு, அதன் கழுத்திலிருந்து ஒரு கயிறு ஓடுவதைக் கவனித்தார். அது ஒரு கட்டையில் கட்டப்பட்டிருந்தது.

மாடும் கட்டியிருந்தபடியால்தான் அவ்விடத்தை விட்டு ஓடவில்லை என்று உணர்ந்த வித்துவான் சிறிது நேரம் அங்கு வாழா நின்ருர்.

நீயும் நானும் ஒரு வயிற்றிற் பிறக்காவிட்டாலும் அபூர்வ சகோதரர்ான்.

எப்படி?

ஒரேநாள் இருவரும் பாடசாலையால் டிஸ்மிஸ் ஆனேம்... ஒரே நாளில் சிறைச்சாலைக்கு வந்தோம்.

* * * — சித்திரபானு




முதல் பைத்தியம்: நான் வந்த ரயில் நடுக்காட்டில் நின்றுவிட்டது. நான் இறங்கித் தள்ளித்தான் எஞ்சின் ஸ்ராட்டானது.

இரண்டாம் பைத்தியம்: நான் வந்த பிளேன் விண்வெளியில் நின்றுவிட்டது. நான் இறங்கித் தள்ளித்தான் ஸ்ராட்டானது.

ஆசிரியர்: எனது ஆசிரியர் வேலை பிள்ளையைப் பெற்றெடுப்பது போன்றது. ஒன்பது மாதத்திலும் கடைசி நாள்தான் கஷ்டமானது.

ஆசிரியை: உவ் இரண்டையும் நான் செய்கிறேன்... என் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்.



கவலையாயிருக்கிறியே... என்ன கவலை?

என் மகன் கிருமிநாசினி குடித்துத் தப்பிவிட்டானே என்ற கவலை.

என்ன கவலையில் அவன் கிருமிநாசினி குடித்தான்?

ஊரடங்குச் சட்டத்தால் படங்கள் பார்க்க முடியவில்லையே என்ற கவலை.

காதலன்: மன்னிக்க வேணும்... ஊரடங்குச் சட்டமாகையால் வந்து சந்திக்கமுடியாமல்போச்சு!

காதலி: மலைப்பாம்பு குறுக்கே நின்றுலென்ன மதயானை குறுக்கே நின்றுலென்ன வருவேன் என்று சொன்னீர்களே... யோசித்துத் தான் வீரப்பிரதாபங்களைப் பேச வேணும்.

காதலன்; உனக்காக நான் மதம் மாறவும் தயார்.

காதலன்: நாலைக்கு இன்னுமொரு பெண்ணைச் சந்தித்தால் பிறகும் மதம் மாறுவீங்கள் அப்படித்தானே.

— ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுமணிகள்

★ மிகப்பெரிய விமானங்களெல்லாம் 35000 அடி உயரத்தில்தான் பறக்கின்றன. கொன்கோர்ட் விமானம் 70,000 அடி உயரத்தில் பறக்கின்றது. ஒலியின் வேகம் மணிக்கு 675 மைல்கள். இந்த விமானத்தின் வேகம் மணிக்கு 1,350 மைல்கள்.

★ தாமரை இலையில் மழைத்துளிகள் விழும்போது சப்த ஜாலங்கள் எழுகின்றன. இவ் இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்த சுவாதி என்ற மகரிஷியே மிருதங்க வாத்தியத்தைச் சிருஷ்டி செய்தார் என சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

★ ஒலிம்பிக் பந்தயம் 1896-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஐந்து வளையங்களைக் கொண்ட ஒலிம்பிக் கொடியை 1913-ல் கண்டுபிடித்தார்கள். ஐந்து வளையங்கள் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.

★ சுவாமி விவேகானந்தர் தமிழர்களை உயர்வாக மதித்வர். அவர் வெளியிட்ட ''பிரபுத்த பாரத'' என்ற பத்திரிகைக்கு முதல் ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தது ஒரு தமிழரையே. வத்தலகுண்டு ராஜம் ஐயர் ஆசிரியர் பதவியை ஏற்றபோது வயது 26 கூட ஆகவில்லை.

★ ஜெயப்பிரகாஷ் நாராயண் பம்பாய் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது படிக்க ஏதாவது புத்தகங்கள் வேண்டுமா என்று கேட்டபோது, ''நல்ல கற்பனையான புத்தகங்களென்றால் நல்லது... பிரச்சாரப் புத்தகங்கள் வேண்டாம்" எனப் பதில் கூறினராம்.

★ கல்கி அவர்கட்கு தாமிரவருணி ஆற்றங்கரையென்றால் அலாதிப்பிரியம். ஓய்வு கிடைத்த நேரங்களில் அங்கு நண்பர்களுடன் உட்கார்ந்து சுவாரஸ்யமாகப் பேசி மகிழ்வாராம்.

★ உலகில் இரண்டாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. 305 மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றது.

★ மாகாத்மாக்காந்தி ஒரு கொள்கை வீரர். காலத்திற்குக் காலம் தன் கொள்கையை மாற்றுபவரல்ல. தமிழ் நாட்டில் தம் முழு உடலை மூடத் துணியில்லா மக்களைக் கண்டு வருந்தித் தானும் அவர்களைப் போல் உடுக்க விரதம் பூண்டார்.

இன்றைய நாகரீகத்தின்
இணையற்ற தேர்வுக்குகந்த



ரகம் ரகமான
தரந்தரமான
ஆடை வகைகளுக்கு
அனைவரும் நாடுவது

ரஞ்சனாஸ்
புடவை மாளிகை

5, மக்கள் சந்தை, — யாழ்ப்பாணம்.

லண்டனுக்கு வட்டமேசை மகாநாட்டிற்குச் சென்றபோதும், ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் விருந்து உபசாரத்தில் கலந்துகொண்டபோதும் தன் உடையை மாற்றிக்கொள்ளவில்லை.

உலகத்தில் மிகவும் அதிகமான புத்தகங்கள் இந்தியாவிலிருந்தே வெளியாகின்றன. ஆண்டுக்கு 14,000 புத்தகங்கள் இந்தியாவில் இருந்து வெளியாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் மனிதர் என்பதை மறந்து விட்டோம்!

வன்செயலால் பாதிக்கப்பட்டு அந்த ரயிலில் என்னுடன் இருந்தவர்களை நினைத்தபோது, மலைப்பாம்பின் வயிற்றில் எல்லோரும் இருப்பதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது.

விசில் ஊதப்பட்டது. ரயில் மதவாச்சியை நோக்கி ஊர ஆரம்பித்தது. அப்பொழுது நான் பம்பாயில் படித்தகால நினைவுகள் நிழற்படம்போல் நினைவில் வந்தன.

ஹிந்துக்கள் முஸ்லீம்களையும், முஸ்லீம்கள் ஹிந்துக்களையும் கொன்று குவித்துக்கொண்டிருந்த காலமது. அப்பொழுது எனது கல்லூரியில் அஹமட் அபாஸ் எழுதிய ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

ஒருவர் கொலை செய்யப்பட்டு மேடையில் குற்றுயிராகக் கிடக்கின்றான். அத்தவீதியால் ஒரு ஹிந்து வருகின்றார். அவரிடம் உயிருக்குப் போராடுபவன், 'தண்ணி தாங்க. தண்ணி தாங்க'' என்று கேட்கிறான். அதற்கு அவர், ''நீ ஹிந்துவா? முஸ்லீமா?'' என்று கேட்கின்றார். அவன் மீண்டும் ''தண்ணி... தண்ணி...'' என்று கேட்கின்றான். அந்த ஹிந்து சினத்துடன் அவ்விடம் விட்டுப் போகின்றார்.


பின்பு அவ்வீதிவழியே ஒரு முஸ்லீம் வருகிறார். அவரையும் அந்த மரணத்தின் பிடியில் இருப்பவன், ''தண்ணி... தண்ணி...'' என்று கேட்கின்றான்.

அந்த முஸ்லீம் ''நீ முஸ்லீமா அல்லது ஹிந்துவா?'' என்று கேட்கின்றார். அதற்கும் அந்த மரண அவஸ்தையில் இருப்பவன், ''தண்ணி... தண்ணி...'' என்று கேட்டவண்ணம் தலை சாய்ந்து இறக்கின்றான்.

அதில் இறந்தவன் ஒரு ஹிந்துவாக இருக்கலாம் அல்லது முஸ்லீமாக இருக்கலாம்— ஆனால் நிச்சயமாக அவன் ஒரு மனிதன் என்பதை அந்த நாடகம் எமக்கு கற்பித்துத் தந்தது.

இந்த நாடகத்தையும், நம் நாட்டில் தலைவிரித்தாடும் ஊழிக்கூத்தையும் நினைத்தபோது என் கண்ணால் கண்ணீர் பெருக்கெடுத்தது.

**ஷெயிலீலாகனதீதார்**



எழுத்தாளன்: என்ன ஆசிரியர் யோசனையில் இருக்கிறீங்கள்...?

ஆசிரியர்; வதந்திகள் கற்பனை பண்ண வல்லமையுள்ளவர்கள் காவியம் கற்பனை பண்ணினால் இலக்கிய உலகம் வளம்பெறுமே என்று சிந்தித்தேன்.

— ஜோக்கிரட்டீஸ்



தாய்: ஏன்டி உன் காதலன் உன்னை இப்போ பார்க்க வருவதில்லை?

மகள்: நான் எல்லா உயிர்களையும் நேசிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. தன்னை மட்டும் நேசிக்க வேண்டுமாம்.

□ □



ஏய்... என்னை மதித்துப் பேசு... உன்னைப் போல் நான் கப்பலில் வந்த அகதிஅல்ல. நான் ஆகாய விமானத்தில்வந்த அகதி.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக... வருக...

உங்கள் அழகுக்கு
மெருகூட்டும்
ஆடைத் தினிசுகளின்
அற்புதமான தெரிவுக்கு

உகந்த சிறந்த இடம்

கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

55-56, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.

— உண்பவனே பலசாலி —



இருபதாம் நூற்றுண்டில்
இணையற்ற ஸ்தாபனம்

உங்கள் நாவுக்கு
அறுசுவையளிக்கக்
காத்திருக்கிறது --

பிளவ்ஸ் ஹோட்டல்

★

சுகாதாரமாகவும், சுவையாகவும்
பல வருட அனுபவம் வாய்ந்தவர்களால்
தயாரிக்கப்பட்ட

ரொட்டி, ரோஸ், கொத்துரொட்டி,
குருமா, இடியப்பம், பிட்டு, சுவீற்
வகைகள்;

தித்திக்கும் தேனீர், கோப்பி
குளிர்பானங்கள் வகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

பிளவ்ஸ் ஹோட்டல்

100, ஐந்து சந்தி, --- யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவத் தேன்

தர்மகுலசிங்கம்

அந்தக் காட்டின் நடுவே, நாலா பக்சங்களிலும் கிளைகளைப் பரப்பி, விழுதுகளை விட்டுச் சிந்து பாடிக் கொண்டிருந்தது ஆலமரம் ஒன்று.

ஆலமரம் வளர, வளர அதன் கிளைகளிலே 'குரு விச்சை மரங்களும் வளர்ந்துகொண்டே இருந்தன.

ஒரு நாள்,

குருவிச்சை மரங்கள் ஆலமரத்தைப் பார்த்துச் சொல்லின, ''ஓ... எங்கள இனிய நண்பனே! நீ நிலத்துக்குக் கீழே நீண்ட தூரம் வேர்களைப் பரப்பி, நாலு பக்கங்களிலும் கிளைகளைப் பரப்பிவிட்டு, எப்புறத்திலும் விழுதுகளை விட்டு வாழ்கின்ருய். அப்படியிருந்தும் என்ன பயன்? நீ எவ்வளவு கஷ்டப்பட்டு வாழ்கிருய்! உன்னுடலில் இருந்து உதிரத்தை உறிஞ்சி வாழும் நாம் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ருேம்''

ஆலமரம் சொன்னது, ''ஓ! என்னுடைய குட்டி நண்பர்களே... அரசாங்கம் மாற, அண்டி வாழ்வோரும் மறைவதுபோல, நீங்களும் ஒருநாள் மறைந்து போவீர்கள்" என்றது.

இதைக் கேட்ட குருவிச்சைகள் இடி இடி என்று சிரித்தன.

நீ சொன்ன தத்துவம் மச்களுக்கேயன்றி, மரங் களுக்கு அல்ல'' என்றன குருவிச்சைகள்.

காலம் சென்றது.

அரசாங்கம் மாறியது.


ஆலமரம் இருந்த காட்டினை அழிக்குமாறு அரசின் உத்தரவு பிறந்தது.

காடுகளை வெட்டுவோர் வந்தனர்.

ஆலமரத்தைத் தறித்து விழுத்தினர்.

ஆலமரம் கிளைகள் ஒடிய, நாலா பக்கங்களிலும் சிதறி விழுந்தது. விழுந்த மரங்களின் கிளைகள் பல குருவிச்சைகளின் மேலே விழுந்து அவற்றைச் சாருக்கின. குற்றுயிராக விழுந்து கிடந்த ஆலமரம், குருவிச்சைகளைப் பார்த்துக் கேட்டது.

''அண்டி வாழ்ந்த நண்பர்களே நலம்தானு?''



பெண்: ஊரடங்குச்சட்டம் நெடுக இருந்தால் நல்லது.

ஒருவர்; ஏன்?

பெண்: அப்போதான் இந்தக் கல்யாணம் பண்ணிய ஆம்புளைகளெல்லாம நேரத்திற்கு வீட்டிற்கு வருவார்கள்.

## சாந்தி சாந்தி சாந்தி ...

நல்லூர் கந்தசாமி கோயில் வீதியில் உட்கார்ந்திருக்கும்போது, இருவரின் சுவாரஸ்யமான பேச்சு என் காதில் விழுந்தது.

''இலங்கையில் இன்று இனக்கலவரமில்லாது சமரசம், சமாதானம் நிலவும் இடம் ஒன்றேஒன்றுதான்" என்ருர் ஒருவர்.

மற்றவர், ''அது எந்த இடம்'' என்ருர் மற்றவர்.

''எமது பைத்திய ஆஸ்பத்திரியாகிய அங்கொடைதான் என்ருர்" அவர்.

— சித்திரபானு


வெளி வந்துவிட்டது!

சுதாராஜ் எழுதிய

''பலாத்காரம்''

அகில இலங்கை ரீதியாக வென்ற
ஐந்து சிறுகதைகளை உள்ளடக்கிய,
பத்து சிறுகதைகளைக் கொண்ட தொகுதி.

விலை: ரூபா 4-15

தமிழ்ப் பணிமனை வெளியீடு

தொடர்பு முகவரி: சி. இராஜசிங்கம்
23, வடக்கு வீதி, — புத்தளம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. முருகமூர்த்தி, கரவெட்டி,
கே: உலகமொழிகளில் நீர் விரும்பும் சொல் எது?

ப: Matrimoney. இதில் money அதாவது பணமிருக்கு.

செல்வி. மனோன்மணி தம்பையா புத்தூர்.
கே: மகுடியாரே உமது செவிப்புலன் திடீரெனப் பாதிக்கப்பட்டால்?

ப: கவலைப்படமாட்டேன்... சொன்னதைச் சொல்லும் அறிவாளிகளும் கலைஞர்களும் நிறைந்த நம் நாட்டில் காது கேளாமல் போவது ஒரு கேடா.

மு. கனகநாயகம், மட்டுநகர்.
கே: உலகில் பேச்சு எப்போ ஆரம்பமானது?

ப: கடவுள் இரண்டாவது பெண்ணையும் படைத்த போது.

செல்வி ரதினி மாணிக்கவாசகர்
கே: கொடிது எது? கொடிதிலும் கொடிது எது?

ப: கொடிது பாம்பின் விஷப்பை. கொடிதிலும் கொடிது கொடியவனின் பணப்பை.

த. முத்துவேல், கண்டி.
கே: எப்போ நாம் சந்தோஷமாக வாழ்வோம்?

ப: சந்தோஷமாக வாழ்வோம் என்ற சந்தோஷத்தைக்கூட நாம் இன்று இழந்து விட்டோம்.

க. நாதன், சாவகச்சேரி.
கே: கொன்கோர்ட் விமானத்திலும் வேகமானது எது?

ப: கோபாவேசத்தில் நிற்கும் மனைவியின் நாவின் விசை.

ப. தேவராசா, திருகோணமலை.
கே: தாரால் சுவரெல்லாம் எழுதுவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



ப: தார்மீக இலக்கியம் வளர்க்கிறார்கள்.

மு. வடிவேற்கரசன், கிளிநொச்சி.
கே: எமக்கு இன்று என்ன தேவை?

ப: உழைக்கும்கைகள், அறிக்கைகள் அல்ல.

ப. அற்புதராசா, குடத்தனை.
கே. மனிதனுக்குள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

ப: எல்லோருக்கும் தலைமேல் இருப்பது ஒரு வானம். ஆனால் ஒவ்வொருவருக்கும் தலைமேல் இருக்கும் தலை எழுத்து வேறு.

## பதில்

செல்வி மனோரஞ்சிதம் தம்பையா புலோலி.
கே: எமது வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறும்?

ப: கருவறையில் உயிர் பெற்று, பள்ளியறையில் உளம்பெற்று, மணவறையில் உறவு பெற்று, கல்லறையில் உறங்கும் வாழ்க்கையிது.

சி. மணிசேகரன், நெடுங்கேணி.
கே: வளர்ச்சிக்கு என்ன தேவை?

ப: மரத்தின் வளர்ச்சிக்கு மண்ணில் உரம் வேண்டும். மனிதனின் வளர்ச்சிக்கு மனத்தினில் உரம் வேண்டும்

பா. பலர்ராஜன், கல்முனை.
கே; நாட்டு அரசியல் நிலையை பற்றிக் கவலைப்படாது எந்நேரமும் குடிபோதையில் இருப்பவனைப் பற்றி உமது கருத்து?

ப: இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன அல்லது குரங்கு தான் ஆண்டாலென்ன என எண்ணும் பெரும் குடிமகன்

சி. தவராசா, சாவகச்சேரி.

கே: அரசியல் உலகில் போலிகளின் நிலை என்ன?

ப: அவர்கள் வடிக்கும் போலிக்கண்ணீரில் அவர்கள் மாண்டுவிடுவார்கள்.

ர. முத்துக்குமாரு, உடுப்பிட்டி.

கே: இன்றைய உலகின் பெரும் நகைச்சுவை எது?



ப: அஹிம்சா மூர்த்திகள் போதித்த உபதேசம்.

சி. அருள்நாதன், மிருசுவில்.

கே: விஞ்ஞானம் என்ன சாதனை செய்து கொண்டிருக்கிறது?

ப: விஞ்ஞானம் அண்மையில் கர்ப்பவதியாகி, 'நியூட்ரன் பொம்' என்னும் சிசுவைப் பிரசவித்திருக்கிறது. இதன் சாதகம் அதன் அண்ணனாகிய அணுக்குண்டிலும் பொல்லாதது.

செல்வி. மகேஸ்வரி செல்லையா மீசாலை.

கே: நரகலோகத்திற்கும் அனுப்ப முடியாத அருவருப்பானவன் யார்?

ப: அகதியிடம் திருடுபவன்

சி. வடிவாம்பாள், குருநகர்.

கே: ஒரு குடும்பப்பெண் எப்படி இருக்க வேண்டும்?

ப: காஞ்சி காமாட்சி காசி விசாலாட்சி மதுரைமீனாட்சி போன்று தெய்வமாக இருக்க வேண்டும்.

செல்வி. கனகாம்பிகை செல்லையா மானிப்பாய்.

கே: திரையில் நீர் எதிர்பார்ப்பது என்ன?

ப: புதுயுகம். புதுமுகமல்ல.

எஸ். ராஜேந்திரம், மூதூர்.

கே: பணம் எப்படிப்பட்டது?

ப: பாதரசம் போன்றது... கையில் நிலைகொள்ளாது.

வ. தம்பிமுத்து, அச்சுவேலி.

கே: மகுடியாரே வாழ்க்கை கசக்கிறதா இனிக்கிறதா?

ப: பசப்பு வார்த்தைகளை நம்பி கசப்பாய்ப் போய்விட்டது.

செல்வி. உமாநேசரத்தினம் சாவகச்சேரி.

கே: உன் காதிற்கு நாரசம் எது?



ப: நரஸ்துதி.

மு. செல்வராசா, பருத்தித்துறை

கே: மனிதன் என்பவன் யார்?

ப: இன்று பணத்தைத் தேடியலையும் நாளைய பிணம்.

க. தங்கவடிவேல், மாதகல்.

கே: சூரியன் என்பது என்ன?

ப: பிரபஞ்ச ரதத்தின் ஒரு சக்கரம்.

செல்வி. வனஜா குமாரசாமி, கொடிகாமம்.

கே: ஒரு இனத்தைக் கெடுத்து விட்டுத் திருத்த முடியுமா?

ப: பாலில் நஞ்சைக் கலந்து விட்டு, அதைச் சுத்தமான பாலாக்குவது கஷ்டமல்லவா

கி. குமாரமங்கலம், வியாபாரிமூலை.

கே: ஒரு நாடு எப்போது வளர்ச்சி காணுது?

ப: தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் அரசியல் தந்திரம் வளரவையாது.

சி. மோகன், சாவகச்சேரி.

கே: தமிழ்மக்களுக்கு இன்றைய நிலையில் நீர் கூறும் புத்திமதி என்ன?

ப: ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நரி நண்டுகளை உலாத்திற்குக் கூட்டிக் கொண்டு போன கதையாய் முடியக்கூடாது.

செல்வி. மனோரஞ்சிதம் கனகசபை நல்லூர்.

கே: வர்த்தகன் கலைஞனாக இருந்தால்?



ப: குத்துவிளக்கு முன் கண்ணீர் வடிப்பான்?

# மணிபல்லவம்

## — வெளிநாட்டவர்க்கு —

★ இலங்கையிலுள்ள அமெரிக்கத் தகவல் பிரிவின் புதிய தகவல் அதிகாரியாகச் செல்வி மேரி ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ கலாநிதி க. கைலாசபதி அவர்களின் அமெரிக்க விஜயத்தை முன்னிட்டு காலியான பல்கலைக்கழக யாழ் வளாகத் தலைவர் பதவிக்கு சு. வித்தியானந்தன் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ சமீபத்தில் நடந்த வன்முறை அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் தொகை சுமார் 30 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டது போன்று யாழ் நகரில் அமைந்திருந்த தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் யாவும் வன்முறையாளரின் வெறிச்செயல்களுக்கு இலக்காகிப் பரிதாபமாகக் காட்சியளிக்கின்றன.

★ இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) பிரமுகரும் முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி அதிபருமான தோழர் மு. கார்த்திகேசன் அவர்கள் 10-9-77-ல் யாழ்நகரில் காலமானார்.

★ நாட்டிலேற்பட்ட பதட்டநிலைமையால் நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவ நிகழ்ச்சிகள் வழமையான ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாகவும், எளிமையாகவும் நடைபெற்று வருகின்றன.

★ கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி இம்மாதம் நாட்டின் பல பாகங்களிலும், வானொலியிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் பல இடம்பெற்று வருகின்றன.

★ குடியரசு இலங்கையின் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு புதிய அரசமைப்பு உருவானதும், நாட்டின் நிர்வாகத்துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

★ நாட்டில் பரவலாக இயங்கிவரும் தனியார்துறை டியூட்டரிகளை முற்றாகத் தடை செய்யுமாறு அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சைக் கோரியுள்ளது.

★ யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களின் போது தீக்கிரையான சந்தைக்கடைகளை மீண்டும் கட்டும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. எரிக்கப்பட்ட 130 கடைகளையும் கட்டிமுடிக்க யாழ் மாநகரசபை சுமார் 4 லட்ச ரூபாயை ஒதுக்கியுள்ளது.

### உரிமை

வாழ்க்கை வாழ்வதற்கு மட்டுமன்று; உரிமையோடு வாழ்வதற்குக் கூடத்தான். — அரிஸ்டாட்டில்

### அன்பு

அன்பாக இருப்பதற்குப் பணம் தேவையில்லை.
— காந்தியடிகள்

### சிந்தனை

சிந்தனை இல்லாத கல்வி வீண் வேலையே.
— கன்பூஷியஸ்

### சமத்துவம்

இருட்டிவிட்டால் எல்லா மனிதர்களும் கறுப்பானவர்களே.
— எமர்சன்

## மகுடி தொடர்ச்சி....

சி. வரதராஜன், சுழிபுரம்.
கே: தேறுதல் வார்த்தைகளால் ஒருவனின் கஷ்டத்தைப் போக்க முடியுமா?

ப: எரியும் வீட்டைக் கண்ணீரால் அணைக்க முடியுமா?

சி. அன்னபூஷணம், பருத்தித்துறை.
கே: சிலர் அழகைத் துதிக்கின்றார்களே அழகு சாப்பாடு போடுமா?

ப; அம்புலியின் வெளிச்சத்தால் அடுப்புப் பற்றவைக்க முடியாதே.

க. தங்கராசா, திருகோணமலை.
கே: கோயில் உற்சவகாலங்களில் சனநெரிசலை நாடிப்போகும் ஆண் பெண்களைப் பற்றி உமது கருத்து?

ப: மெய்யுணர்வு

சி. ஞானசுந்தரம், சங்கானை.
கே: உலகில் யுத்தத்தால் இறந்தவர்கள் தொகை கூடவா? அல்லது நோயால் இறந்தவர்கள் தொகை கூடவா?

ப: நகைப் பைத்தியத்தால் இறந்த பெண்கள் தொகை கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசக்கயிறு

## — 'திக்கவயல்' —

**வா**ள் எடுத்தவன் வாளால் அழிந்துவிட வேண்டும் என்பது வரலாறு தரும் நியதி.

எதில், அதிகம் பற்று வைத்து வாழ்கின்றாயோ, அந்தப் பற்றிலேயே, 'பாசக்கயிறு'ம் திரித்து வைக்கப்பட்டுள்ளது.

சோக்ரட்டீஸ் என்றொரு தத்துவ அறிஞன் கிரேக்கத்திலே!

தத்துவத்தை உயிராக நேசித்தான்; அந்தத் தத்துவ விளக்கங்களை மக்களுக்கு ஊட்டினான். அந்த விளங்கங்கள் முடியு முன்பே அவருக்கு விஷக் கோப்பை காத்திருந்தது.

சாநேரிடினும் உண்மையைக் காத்தான் அரிச்சந்திரன் அந்த உண்மை என்ற தத்துவமே அவனை 'மயான காண்டத்தில்' நிற்பாட்டியது.

கடவுள் இல்லையென்பவனுக்கு எது சோதனை? கடவுளில் நம்பிக்கை வைப்பவனுக்கு எத்தனை சோதனை!! "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என பாடிய அப்பர் நீற்றறையில் அடைபட்டுக் கிடந்தார்; அது போதாது என்று கல்லிலே கட்டிக் கடலிலும் விட்டனர்.

காயாத மரத்துக்கு என்ன சோதனை!

காய்த்த மரத்துக்கு எத்தனை கல்லெறி வேதனை!!

தர்மத்தை உயிராக நேசித்தான் கர்ணன் சாகும் தறுவாயிலும் தர்மத்தையே தாரை வார்த்துக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

எதில் பற்று வைக்கின்றாயோ அதிலேயே பாசக்கயிறும் திரித்து வைக்கப்படுகின்றது.

புத்திர பாசத்தைப் பெரிதென மதித்த தசரத சக்கரவர்த்தி இராமன் காட்டுக்குப் போன போது உயிரையே விட்டுவிட்டான்.

தமிழுலகிற் காப்பிய மணம் பரப்பி, கம்பராமாயாணத்தைத் தமிழனுக்குத் தந்த கவிச்சக்கரவர்த்தி கம்பன், தானும் புத்திர பாசத்தால் பாதிக்கப்பட்டு மரணத்தை அடைந்து விட்டான்.

பாராண்ட சக்கரவர்த்திக்கும் கவியாண்ட சக்கரவுர்த்திக்கும் பாசக்கயிறு பிள்ளைப் பாசத்தில் திரிக்கப்பட்டது.

பெண்ணாசையே பெரிதெனக் கொண்ட இராவணன் அந்தப் பெண்ணாசையே பின் தொடரப் போர்க்களத்தில் உயிரை விட்டான்.

சகோதர பாசத்தை நேசித்த கும்பகர்ணன் — திக்கெல்லாம் தன் புகழை நாட்டிய கும்பகர்ணன் — செஞ்சோற்றுக் கடன் தீர்க்கப் போர்க்களத்தில் உயிரை விட்டான்.

எதில் இருந்து உன்னால் விடுபட முடியாதோ அப்போதே மரணத்தின் எல்லைக் கோடும் தெரிய ஆரம்பிக்கின்றது.

யானை வளர்த்தவன், —அங்குசத்தால் அதனை அடக்கியாண்டவன், கடைசியில் அந்த யானையாலேயே அவனின் மரணம் காத்துக் கிடக்கிறது.

கடலில் திரிபவனுக்குக் கடலே ஒரு நாள் யமனாகிறது.

காட்டில் திரிபவனுக்கு, காட்டிலேயே மரண ஓலம் கேட்கின்றது.

எதிலே பற்று வைக்கின்றாயோ அங்கேயே ஆயுள்ரேகையும் எழுதப்படுகின்றது.

மண்ணாசை பிடித்த அலெக்சாந்தர், அந்த எல்லை சிக்கு முன்பே மரணத்தின் பிடியில் சிக்கி விட்டார்.

ஐரோப்பாவையே பிடிக்கலாம் என எண்ணிய 'கிட்லர்' கடைசியில் தானே மண்ணுக்கு இரையானார்.

தனது இறுதி முடிவான மண்ணாசையால் துரியோதனன் இருந்த இடம் தெரியாமல் சென்றே விட்டான்.

எதிலே பற்று வைக்கின்றாயோ அங்கே பாசக்கயிறை எறிய யமன் தயாராக இருக்கிறான்.

சாராயத்தைக் குடித்துக் குடித்துப் மழகியவன் கடைசியில் இருதயமும் எரிந்து, இறைவனடி செல்லுகின்றான்.

கத்துகின்ற தவளை கத்திக் கத்தியே இறந்து போய் விடுகின்றது.

எங்கே உன் புத்தி செல்லுகின்றதோ அங்கே யமனும் எட்டிப் பார்த்து விட்டே செல்லு

---

ஒருவர்: "காணிவலில் ஒரு வீரர் நெஞ்சில் வைத்துக் கல்லு உடைக்கிறார்; வருகிறீரா பார்ப்போம்"!

மற்றவர்: "அது சலிச்சுப் போச்சு அண்ணே, யாராவது கல்லினை வைச்சு நெஞ்சை உடைச்சால், கூட்டிக் கொண்டு போ பார்க்கலாம்"

ஒருவர்: ? ?

— 'திக்கவயல்' —

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றான் என் காரியம் கிட்டுமா என்று ஆராய்ந்தே செல்லுகின்றேன் போர்த்துக்கேயர் இலங்கையில் அரசாண்ட காலம்.

கொன்ஸ்தாந்தின் திசா என்று ஒரு தளபதி இருந்து, மமதை கொண்டிருந்த காலம்.

கோயில்களை இடித்து வீழ்த்துவதே அவன் குறிக்கோள்.

இவ்வாறு கோயில்களை இடித்து வீழ்த்திய கொன்ஸ்தாந்தின் திசா, கண்கள் இரண்டும் முடமாகி, இறுதியில் இலங்கையை விட்டுப் புறப்பட்டான்.

குட்டக் குட்டக் குனிந்த தர்மபாலா என்ற இளவரசன், கடைசியில் தன் முன்வாய்ப் பல்லு மூன்றையும் இழந்து — போர்த்துக்கேயரிடம் அரசுரிமையைக் கோட்டை விட்டான். அவமானத்தால் உயிரையும் விட்டான். அவன் கட்டி வளர்த்த கோழைத்தனமே அவனின் இறுதி ஊர்வலத்தில் முடிவடைந்தது.

சுதந்திர தாகத்தை வளர்த்த முஜிபுர் ரகுமான் தனது நாட்டுப் படை வீரர்களால் மடிந்து போனார் — கடைசியில் தான் கட்டி வளர்த்த சுதந்திர வேள்விக்குத் தானே இரையாகி விட்டார்.

அகிம்சைக் கோட்பாட்டை அளித்த காந்தியார் தன் கொள்கையாலேயே கோட்சேக்கு இரையாகி விட்டார்.

"சிறிய பொய்யைச் சொல்லு உலகம் ஏற்காது, பெரிய பொய்யைச் செல்லு உலகம் ஏற்கும்" என்ற கோயாபல்ஸ் கடைசியில் தன் பொய் எடுபடாமல் தானும் தன் ஆறு பிள்ளைகட்கும் 'தற்கொலை' முடிவைத் தேடித் தந்தார்.

நீந்திச் செல்பவனின் உயிரை எடுக்க ஒரு சுழி காத்திருக்கிறது.

ஆடிச் செல்லும், படகை அந்தரத்தில் கவிழ்த்து விட ஒரு திமிங்கிலம் வாழத்தான் செய்கிறது.

கொண்ட கொள்கைகளையே அழியச் செய்ய 'யமன்' காத்திருக்கிறான் "ஜாக்கிரதை"

## 'புத்திசாலி'க் கழுதை
### (துருக்மேனியக் கதை)

முன்னொரு காலத்தில் கழுதை ஒன்று ஒரு தோட்டத்துக்குள் புகுந்தது. மரங்களில் ஆப்பிள் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருப்பதையும் வேலியில் பூசனிக்காய்கள் காய்த்துக் கிடப்பதையும் பார்த்தது. முதலில் அது ஆப்பிள் பழங்களையும் பிறகு பூசனிக் காய்களையும் உற்றுப் பார்த்தது, மிகவும் எரிச்சலுடன் தன் காதுகளை அசைத்தது.

"இந்த உலகில் உள்ள பொருட்கள் முட்டாள் தனமாக வைக்கப்பட்டிருக்கின்றன" என்றது கழுதை. மரத்தின் மேல் உட்கார்ந்திருந்த சிட்டுக் குருவி காதில் இது விழுந்தது.

"ஓ மகா புத்திசாலியே, இந்த உலகிலுள்ள எந்த ஏற்பாடு உனக்குப் பிடிக்கவில்லை?"

"உனக்கே இது தெரியவில்லையா" என்று முதலில் ஆப்பிள் பழத்தையும், பிறகு பூசனிக்காயையும் பார்த்துத் தலையாட்டிய படி பதில் சொல்லிற்று கழுதை. "ஆப்பிள் பழங்களைப் பார். அவற்றின் அளவு குழந்தையின் கை முஷ்டியளவுதான். ருசியான இனிய சாறுள்ள அந்தப் பழங்கள் உயரமான மரத்தில் கனிந்து குலுங்குகின்றன. ஆனால் என் தலையளவுள்ள பூசனிக் காய்கள் தரையில் படரும் செடியில் இலேசான காம்புகளில் காய்க்கின்றன"

"இதில்தான் மாபெரும் விவேகம் அடங்கியுள்ளது" என்றது சிட்டுக்குருவி.

"விவேகமா?" என்று ஆத்திரத்துடன் கூப்பாடு போட்டது கழுதை. "பூசனிக்காய்கள் மரத்திலும் ஆப்பிள் பழங்கள் தரையிலும் காய்க்குமானால் அதுதான் விவேகமான காரியம்."

அப்போது கழுதைஅடி மரத்தின் மீது தன் உடலைத் தேய்த்தது. அதனால் ஓர் அப்பிள் பழம் அதன் தலை மீது தொப்பென்று விழுந்தது.

"ஓ, என் தலை போச்சு" என்று வலி பொறுக்காமல் கூப்பாடு போட்டது கழுதை. இது கண்ட சிட்டுக்குருவி குபீரெனச் சிரித்தது.

"உன் தலையில் விழுந்தது ஆப்பிள் பழத்துக்குப் பதிலாக பூசனிக் காயாக இருந்திருந்தால் என்னவாகியிருக்கும் என்று கற்பனை செய்து பார். இந்த உலகிலுள்ள பொருட்கள் மிகவும் விவேகத்துடன் தான் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன என்பது இப்போது உனக்குப் புரிகிறதா?"

"ஆமாம் ஆமாம்" என்று சொல்லிக் கொண்டு அவசரம் அவசரமாக ஆப்பிள் மரத்தை விட்டு அப்பால் வெகு தூரம் போய்விட்டது கழுதை.

நன்றி யு. எஸ். எஸ். ஆர்.



என்ன உன் உடம்பு மெலிந்து கொண்டு போகுது!?

பயத்தில்... கனவில் கடன்காரன்தானே வருகிறான்.

— ஜோக்கிரட்டீஸ்

### ரசனை

ஆறடுக்கு மாளிகையின் உரிமையாளராகிய ஒரு பெண் திரையில் அழுத போது, கலரியில் உட்கார்ந்திருந்த பெண் ஒருத்தி கதறி அழுதாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சாரல்

**சித்திரா**

★ எதையும் ஸ்தாபனமாக்கி விடக்கூடாது. மக்களின் மனோசுத்துவ அமைப்பின் பலவீனம் இது தான் ஒரு இயக்கத்தின் பலன்களை அனுபவிக்கும் போது அதையே ஸ்தாபனமாக்கி அது தரும் பாதுகாப்புச் சுகத்தில் மயங்கி நிற்பதுதான். புரட்சி என்பதற்கு ஓய்வே கிடையாது. இருக்கவும் கூடாது.

— இந்திரா பார்த்தசாரதி

★ அநாயாசமான — அலட்சியமான — தானே உருவாக்கி வருவது போன்ற — லேசான கிண்டல் இழையோடும் நடை. இதுதான் கனக. செந்திநாதனின் இருபத்தி நான்கு வருடங்களுக்கு முந்திய படைப்பான 'விதியின் கை' நாவலின் நடை. இன்றைய நாவல்களில் வரும் அதே கதாபாத்திரங்கள் : சாதியாலும் பணத்தாலும் உயர்ந்த மனிதர் — அவரது அட்டூழியங்களுக்கு அடிபணியும் கிராமத்து ஏழைத் தொழிலாளர் — இவைகளை எதிர்க்கும் அவர் வழிவந்த புரட்சிகர இளைஞன் — பகைவர்களின் வாரிசுகளுக்கிடையே மலரும் காதல் — சாதி உட்பட பல எதிர்ப்புகள்... இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்பே இப்படி எழுதியிருக்கிறாரே என்று வியப்பதா அல்லது இவ்வளவு காலம் கடந்த பின்னரும் நாவல் அதே இடத்தில் நிற்கிறதே என்று நினைப்பதா என 'விதியின் கை' யைப் படித்ததும் தோன்றுகிறது.

★ ஒவ்வொரு காலாண்டிலும் வெளிவரும் சிறந்த சிறுகதைக்கு பரிசு வளங்கும் திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் 'தகவம்' 1977 — முதற் காலாண்டின் பரிசு பெற்ற சிறுகதையாக தினகரன் வாரமஞ்சரியில் என். சண்முகரத்தினம் எழுதிய கதையைத் தெரிவு செய்துள்ளது. பாராட்டுப் பெற்றவர்கள் நந்தி, முல்லைமணி ஆகியோர். பாராட்டியோருக்கும் பாராட்டப்பட்டோருக்கும் பாராட்டுக்கள். —

★ தமிழை மிக நுண்மையாகக் கையாள வேண்டும் என்று ஒரு கட்டத்தில் திரு. கி. லக்ஷ்மணன் அவர்கள் கூறிய ஆலோசனை, 'புதிய உலகம்' என்ற புதிய மாத சஞ்சிகையின் ஒரு அறிவித்தலை வாசிக்கும் போது நினைவிற்கு வந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. — நகைச்சுவைத் துணுக்குகளை அனுப்புங்கள். சிந்தனைக்கும் சிரிப்புக்கும் இடமாயிருப்பின் எவ்வளவு நலமாயிருக்கும்.

★ இன்று ஈழத்தில் நாவல் இலக்கியத் துறையில் அதிகமான எழுத்தாளர் ஈடுபடுகிறார்கள். ஆனால் குறுநாவல் என்ற இலக்கிய வடிவம் இங்கு உரிய கவனத்தைப் பெறவில்லை. தமிழகத்தில் அநேகமாக எல்லா எழுத்தாளருமே நிறைய தரமான குறுநாவல்கள் எழுதியிருக்கிறார்கள். இதற்கு முக்கியமாக தமிழக பத்திரிகைகளின் ஆதரவையே குறிப்பிட வேண்டும். அதிகமான பிரபல வார மாத சஞ்சிகைகளும் எப்போதும் குறுநாவல்களுக்கு அதிக ஆதரவளித்து வந்துள்ளன. இங்கு குறுநாவல் வளர்ச்சித் தடைகு பிரசுரங்கள வசதியின்மையே ஒரு முக்கிய காரணம். இங்கு அதிகமான — தரமான குறுநாவல்களை எழுதிய — எழுதி வருகிற குறிப்பிடத்தக்க எழுத்தாளர் செ. யோகநாதன் அவர்கள்தான்.

★ ஒரு நாள் காலை இலங்கை வானொலி சேவை இரண்டில் 'நினைவில் நிறைந்தவை' நிகழ்ச்சியில் ஒருவர் பாடிய பாடல் இன்னொருவர் பெயரில் ஒலிபரப்பாயிற்று. தொடர்ந்து ஈழத்துப் பாடலில் ஒருவர் இயற்றிய பாடல் இன்னொருவர் பெயருடன் ஒலிபரப்பாயிற்று. தவறு விடுவது மனித இயல்பு. ஆனால் அடுத்த கணமே அதை உணர்ந்து திருத்தத்துடன் மன்னிப்புக் கோருவது எத்தனை இனிய பண்பு. இதை எமது சில அறிவிப்பாளர் என்று தான் கற்றுக் கொள்வார்களோ ?

★ எம். எம் இக்பாலின் 'ஒரு கருவண்டு பறக்கிறது' சிறுகதைத் தொகுப்பு சமீபத்தில் வெளிவந்துள்ளது.

★ ★ ★ ★

''என்ன கந்தையா அண்ணை கடும் யோசனை செய்கிறாய்'' ?

''என்னுடைய எதிரி வெளிநாடு போய் விட்டான். கடல் கடந்து சென்றவனுக்கும் செய்வினை தற்செய்யுமா என்று யோசிக்கிறன்''



ஒருவர் : 'எனக்குத்தான் சட்டம்பியாரின் குட்டுகளை வாங்கித் தலை வழுக்கையாய்ப் போச்சு... உனக்கு

மற்றவர் : என் சம்சாரம் ஒவ்வொரு புதுப்படம் பார்த்த பிறகு இனி மேல் படம் பார்க்கிறதில்லை யென்று என் தலையில் அடிச்சு சத்தியப் பிரமாணம் செய்வதால் இந்த வழுக்கை

— கனகு —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாதிகள்

— லாலா — உடுவில் —

எமது வாழ்க்கையில் எத்தனையோ வகையான மக்களைச் சந்திக்கிறோம். அவர்களுள் சந்தர்ப்பவாதிகளும் ஒரு வகையினர். சந்தர்ப்பவாதிகள் என்ற பட்டியலில் நானும் நீங்களும் கூட இடம் பெறலாம். எமது அன்றாட வாழ்வில் சந்திக்கும் சந்தர்ப்பவாதிகள் சிலரை அவதானிப்போமா ?

ஒருவர் முன்னர் தனக்கு வேண்டிய செத்தல் மிளகாயை இருத்தல் ரூபா 12 வீதம் வாங்கும் போது என்ன கூறுவார் ? ''அப்பப்பா இந்த அநியாயத்துக்கு எப்பதான் முடிவு வருமோ தெரியாது. ஒரு இருத்தலுக்கு 12 ரூபாயென்றால் இது பகல் கொள்ளைதானே'' என்று பிரலாபிப்பார். அதே நபர் அடுத்த வருடம் தானே மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டு தனது விளைச்சலை இருத்தல் ரூபா 14 வீதம் விற்கும் போதும் ''சே செலவழிச்சது கூட வரவில்லை. வர வர உரம், மருந்துகள் மட்டும் விலை ஏறிக் கொண்டு போகுது. செத்தல் விலை மட்டும் கட்டிப் போட்டது போலை அப்பிடியே கிடக்குது". என்று மூக்கால் அழுவார். இதை நீங்கள் என்னவென்று அழைப்பீர்கள். இது அசல் சந்தர்ப்ப வாதமல்லவா ?

இரயிலில் பிரயாணம் செய்வதற்காக இரயில் நிலையத்தில் நிற்கும் ஒருவர் இண்டைக்கு ''வீக்கென்ட் கிறவுட்'' வரும். நிண்ட நிலையிலைதான் போக வேண்டி வருகிதோ......சீற்றில இருந்து வாற சனங்கள் எப்பன் அரக்கி இருக்குதுகளே, ஏதோ பாட்டன் வீட்டுச் சொத்து மாதிரி சொகுசா இருக்குங்கள். என்று பெரிதாக அளப்பார். சரி இனி இரயில் வந்தவுடன் இவர் விழுந்தடித்து ஏறுவார். பெட்டியினுள் இவர் எதிர்பார்த்தது போல அவ்வளவு 'கிறவுட்' இல்லை. இவர் அமர்ந்த சீற்றில் இவர் மட்டும் தான் இருக்கிறார். இன்னும் ஒருவருக்குப் போதுமான இடம் அருகிலுள்ளது. இந்த அளப்பார் என்ன செய்கிறார் தெரியுமா? சட்டைப் பையுள் இருந்த கைக் குட்டையை எடுத்து அந்த இடத்தில் உட்கார்த்தி விடுகிறார். அடுத்த நிலையத்தில் ஏறும் பிரயாணிகளின் கேள்விக்கு,

''ஓமோம் ஒருத்தர் இருக்கிறார்''

''யேஸ், யேஸ் இட் இஸ் ஒக்குயூப் பைட்''

எனப் பதிலளித்து தனக்கு உரிமையில்லாத அந்த சீற்றை ஆக்கிரமிக்காமல் ஆக்கிரமிக்கிறாரே இவரைச் சந்தர்ப்பவாதி என்று எண்ணாமல் வேறு என்னவென்று அழைக்க ?

இதோ இன்னொரு சந்தர்ப்பவாதி. இரயிலில் சீற் எல்லாம் நிரம்பி விட்டது. ஆட்கள் நின்றும். இருந்தும் பலவித தவ நிலையில் உள்ளனர். இரயில் நிலையத்தில் இரயில் நின்றவுடன் பிரயாணிகள் அவசரமாக ஓடிவந்து பெட்டியின் கதவுகளைத் திறந்து கொண்டு ஏறுகிறார்கள். இதோ எங்கள் நாயகன் திறக்கும் கதவு கொஞ்சம் திறபடுவதும் பின் உள்ளே இருப்பவர்களால் தள்ளிப் பலவந்தமாக மூடப்படுவதுமாக உள்ளது. ''என்ன காணும் நீர் மட்டும் போனாப் போதுமே. கொஞ்சம் கதவைத் திறக்க விடுமன். ஏதோ நீர் மட்டும்தான் ரிக்கெட் எடுத்தனீர்' நாங்களெல்லாம் ஓசியிலை போறத்துக்கு வந்திருக்கிற மாதிரிச் சாத்திப் பிடித்து இருக்கிறீர். இரக்கமில்லாத சனங்களப்பா. இரயில் வெளிக்கிடப் போகுது கெதியாய்த் திறவும் காணும்" என்று சண்ட மாருதமாகிறார் எங்கள் நாயகன். தனது கடும் முயற்சி வெற்றி பெற உள்ளே நுழைந்தவர் தனது மூட்டை முடிச்சுக்களை வாசலிலேயே போட்டுவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார். அடுத்த இரயில் நிலையத்தில் மேடையில் நின்ற பிரயாணி ஒருவர் இக்கதவை ஏறுவதற்காகத் திறக்கிறார். ''இஞ்சை நாங்கள் இருக்கக் குடாமல் இருந்து நெரிபடுகிறம். அதுக்குள் அவரும் ஒருத்தர் இதுக்குள்ளை செருகப் போறாராம் போம் காணும், இஞ்சை இடமில்லை வேறை எங்காலும் பெட்டிக்கை பாரும். ஏதோ நாங்கள் இஞ்சை சுசாலாய் இருக்கிறம் எண்டு நினைச்சுப் போடாதையும்'' எனறு போட்டுவிட்டார் ஒரு போடு எங்கள் பலே சந்தர்ப்பவாதி.

இனி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வருவோமா ? 769 இலக்க பஸ் நிலையத்தில் பஸ்சுக்காகக் காத்துக் கொண்டு 'கியூ' வில் நிற்கிறேன். அதோ ஒருவர் கம்பிக்குக் கீழாகக் குனிந்து ,கியூ' இடையுள் புகுந்து இடம் பிடித்து கொள்கிறார். எனக்கு முன்னால் நின்றவர், ''என்ன ஓய், நீரென்ன படிச்சனீரே, இடைக்குள்ளே ஆடு. மாடு பூந்த மாதிரிப் பூருகிறீர். காற் சட்டை மட்டும் போட்டுடுவினம். ஒரு பழக்க வழக்கம் ஒண்டும் தெரியாது". என்று எரிமலையாக விழுந்தார். பஸ்சும் வந்தது பிரயாணிகள் இறங்கிய பின்னர் ட்றைவரும் இறங்கிறார். ட்றைவரைக் கண்டதும் அவருடைய முகம் மலர்ந்தது ட்றைவரிடம் ''எட சின்னத் தம்பியண்ணை இப்ப இந்த றூட்டிலையே வேலை. உண்ணையண்ணை இந்தப் பேப்பரை ஒருக்கா முன் சீற்றிலை போட்டு விடண்ணை'' என்று சொல்லி பேப்பரை கொடுத்தார். அவருக்கென்ன சந்தர்ப்பம் கிடைத்ததும் பத்திரிக்கையை 'ரிசேர்வ்' ரிக்கட்டாக மாற்றி விட்டார். இவர் ஒரு சந்தர்ப்பவாத மன்னன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசு செல்லுகின்றது

உலகு ரசம்

ஆகாய விமானம், அணுக்குண்டு, எறிகுண்டு, துவக்கு, டாங்கிகள் யாவும் தயாரிக்கப்பட்டு வல்லரசின் ஆயுதப் பண்டகசாலேயில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

உலகம் என்ற உருண்டையில் கலகம் மூழவில்லேயே என்ற கவலேயுடன் காத்திருக்கிறது வல்லரசு.

இரு நாடுகளுக்கிடையே போர் மூளுகின்றது. சண்டை அமர்க்களமகின்றது.

ஏதோ ஒரு பக்கத்தில் நியாயம் இருப்பதாக வல்லரசு சீறி எழுகின்றது. !

ஆயுத விற்பனையை ஒரு பக்கத்துக்கு வளங்குகின்றது.

போர் தொடர்ந்து நடக்கின்றது.

இரு பக்கத்திலும் பிணங்கள் விழுகின்றன.

சண்டை ஓய்கின்றது.

ஆயுத விற்பனே முடிந்த திருப்தியில் வல்லரசு திரும்பிப் போகின்றது.

★ ★ ★

இரு நாடுகளும் எல்லேயில் பாதுகாப்புப் படைகளேப் போடுகின்முர்கள். இராணுவ முகாம்கள் எழும்புகின்றன. இராணுவத்தினர் தனிமையில் புலம்புகின்முர்கள். தனிமையை மறக்கப் பெண்கள் தேவை இராணுவத்தினர்க்கு !

பெண்களிலும் மென்மையான பொம்மைகளே வல்லரசு செய்து அனுப்புகிறது. பொம்மைகளே வல்லரசு காசாக்கி விட்டது. வல்லரசு திரும்பிப் போகிறது.

★ ★ ★

அபிவிருத்தியடையாத நாட்டினே வல்லரசு திரும்பிப் பார்க்கின்றது. எலும்பும் தோலுமாக வாழுகின்ற பள்ளிச் சிறுவர்களே ஏறிட்டுப் பார்க்கின்றது. பள்ளிச் சிறுவர்கட்குப் பால்மாவினே டின்னில் அடைத்து அனுப்கிறது. பள்ளிச் சிறுவர்களுக்கு பாலுணவு அனுப்பும் வல்லரசு நமது நாட்டில் கோதுமை அதிகம் விளேந்து விட்டால் கடலுள் கொட்டுகின்றது. உலக விலே குறைந்து விடுமே என்ற பயமே இதற்குக் காரணம் எனச் சமாதானம் அடைகின்றது. கோதுமையைக் கடலில் கொட்டிய வல்லரசு திரும்பிச் செல்லுகிறது.

ஆமாம்; திரும்பிச் செல்லுகிறது. □ □ □

ஆசியாவைத் திருப்பிப் பார்க்கின்றது. வீரத்தின் விளே நிலமாம் வியட்னுமில் குண்டுகளே வீசுகின்றது. இலட்சக்கணக்கானவர்களே அழித்து விட்டுப் போகின்றது. ஏன் என்று கேட்டால் சனநாயகத்தைக் காப்பாற்ற எனப் பதில் வருகின்றது.

ஆமாம்; சொல்லிக் கொண்டே வல்லரசு திரும்பிச் செல்கிறது

★ ★ ★

அண்டைய நாடான கியூபாவைத் திரும்பிப் பார்க்கின்றது. வல்லரசு ஒன்று அங்கே இலட்சக்கணக்கான கால்நடைகள் கொழுப்புடன் வாழ்ந்திருப்பதைக் காணுகின்றது. பார்த்த வல்லரசு பொருமை கொள்ளுகின்றது. கொழுத்திருந்த கால்நடைப் பண்ணேகளுக்கு நடுவே ஒற்றர்கள் மூலம் விஷப் பக்ரீறியாக்களே எறிந்து விட்டுச் செல்லுகின்றது. இலட்சக்கணக்கான கால் நடைகள் மரித்து மடிகின்றன.

கால்நடைகளே அழித்துவிட்ட வேகத்தில் வல்லரசு திரும்பிப் போகின்றது.

ஆமாம்......வல்லரசு திரும்பிப் போகின்றது.

★ ★ ★

லத்தீன் அமெரிக்க நாடுகளே திரும்பிப் பார்க்கின்றது வல்லரசு. அங்கே 'சிலி' என்றெரு நாட்டில் சனநாயக சோசலிஷம் பூத்திருப்பதைக் காணுகின்றது. சி. ஐ. ஏ. ஒற்றர் படையை வல்லரசு அந்த நாட்டின் மீது ஏவி விடுகின்றது. அங்கே புரட்சி நடக்கிறது. ஆட்சியின் தலேவர் படுகொலே செய்யப்படுகின்முர். பாசிச இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுகிறது. இன்னெரு வல்லரசு அந்த ஆட்சியை அங்கீகரிக்கின்றது. வல்லரசு திரும்பிப் போகின்றது. ஆமாம்...... வல்லரசு திரும்பிப் போகின்றது.


★ ★ ★

பொருளாதாரம் சீரழிந்து விட்டதா, இலம் அழிந்து விட்டதா மனநோய் வந்துவிட்டதா இதோ மன அமைதிக் குளிசைகள் எனச் சொல்லிக் குளிசைகளே விற்றுவிட்டுக் காசாக்கி விட்டுச் செல்கின்றது. ஆமாம் குளிசைகளே விற்றுவிட்டுச் செல்லுகின்றது.

ஆமாம்; எங்கெங்கே எதை, எதை விற்க முடியுமோ, ஆங்காங்கே அதை அதை விற்றுவிட்டு வல்லரசு திரும்பிச் செல்லுகின்றது. ஆமாம் — வல்லரசு திரும்பிக் கொண்டிருக்கின்றது. □ □ □ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிச்சைக்காரன் : உலகத்திலே யார் பெருந் தொகையான சம்பளம் வாங்கிறுர் தெரியுமா? சார்......

ஒருவர் : தெரியல்லையே !

பிச்சைக்காரன் ; சொல்லுறேன்... கேளுங்க... சார்... கோஞேசுகே மட்சுஷிடா என்னும் யப்பானிய வர்த்தகர். அவரின் ஒரு வருடச் சம்பளம் ஒரு கோடியே 53 லட்சத்து 35 ஆயிரத்து 835 ரூபாய்.

— — — — —

ஒருவர் : உங்கள் விளையாட்டு எப்பொழுதும் வெற்றி தோல்வி இல்லாமல் முடிகிறதே !

விளையாட்டு வீரர்: நான் மற்றவருக்கு சம அந்தஸ்து வழங்க விரும்புகிறவன்.

— — — — —

தந்தை : இதுதாஞ உனது ''ரிப்போட்„ எல்லாம் சாதாரண மார்க்ஸ்ஸாக இருக்குதே !

மகன் : இது சாதாரண தந்தையின் சாதாரண்மகனின் சாதாரண ''மாக்ஸ்''

— டோமா

☐ ☐ ☐

## சிலேடைச் சாட்டை

சிலேடையாகப் பேசுவதிலோ அல்லது கவி பாடுவதிலோ தமிழ்ப் புலவர்கள் வல்லவர்கள்.

ஒரு புலவர் புலனெல்லாம் அடங்கிய இறுதி நிலையில் படுத்திருக்கின்ருர். அவரைச் சூழ்ந்து நின்ற உறவினர் துணியில் பாலை நனைத்து அவரின் வாயில் பிழிந்து விடுகின்றனர். புலவர் முகம் சுளிக்கின்ருர். உறவினர் ஒருவர் ''பால் கசக்கிறதா'' எனக் கேட்டார். புலவர் பேச முடியா நிலையிலும் சிலேடையாக ''பாலும் கசக்கவில்லை துணியும் கசக்கவில்லை" யெனக் கூறிஞர். தண்ணீரில் கசக்கிச் சுத்தம் செய்யாத் துணியெனப் பொருள் படக் கூறிஞர்.

## கலைவாணர் அழுதார்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு நாதஸ்வரப் பிரியர். இசை மேதை ராஜரத்தினம் பிள்ளை காலமான போது, ''ராஜரத்தினம்பிள்ளை போன்ற மாமேதைகள் என்றுமே மறையக் கூடாது. அவர் என்றும் உயிர் வாழ வேண்டும் என்பதற்காக என்னுலான சகல விதமான முயற்சிகளையும் எனது சக்திக்கு மேலும் மேற் கொண்டேன். அவரின் உயிருக்கு ஈடாக நான் எதையும் தரச் சித்தமாக இருந்தேன். ஆனல் தோற்று விட்டேன் என்று அழுதார்.

## அடிசிற்கினியாளே !

கணவனின் இதயத்தில் மனைவி இடம்பிடிக்க வேண்டுமென்ருல் சுவையாகச் சமைத்துப் போட வேண்டும்: ''கணவனின் இதயத்திற்கு நுழை வாயில் வாய்'' என்று ஒரு ஆங்கிலப் பழமொழி கூட உண்டு. தமிழ்ப் பெண்கள் கணவனின் சுவை உணர்ந்து உணவு தயாரிப்பதில்லை. ஒரு தமிழ்ப் பத்திரிக்கையில் படித்த துணுக்கு ஒன்று ஞாபகம் வருகின்றது. மனைவி கணவனிடம் ''தலைவலி என்று பகர்ந்தீர்களே காப்பிகொண்டு வந்திருக்கிறேன்'' என்ருள். அதற்குக் கணவன் ''ராமச்சந்திரா ! நீ காப்பி கொண்டு வந்திடுவாயே என்று நினைத்ததில் தானே தலைவலி வந்தது'' என்ருர். இத்துணுக்கு நம்ம தமிழ் நாட்டு நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

சுவை சுவையாகச் சமைத்துப் படைப்பதற்காக இங்கிலாந்தில் ஒரு ஸ்தாபனம் நடத்துகின்ருர்கள். அங்கு டெலிபோன் செய்து கேட்டால் சுவையான சமையல் குறிப்பு ஒன்று செல்லித் தருவார்கள். தமிழ் நாட்டிலும் இப்படி குடும்பப் பெண்களுக்கு உதவுவதற்கு இப்படி ஒரு ஸ்தாபனம் இருந்தால் நல்லாயிருக்குமல்லவா ?

☐ ☐ ☐

## தா(வ)ரவியல்



உன் மனைவி விஞ்ஞானப் பட்டதாரிதானே?

ஓ தாவரவியல் முக்கிய பாடமாகப் படித்தும் மரத்தில் தான் காசு காய்க்குது என்று நினைப்பவள்.

— ஜோக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபின் நயம்

அபின் அருந்திவிட்டு அமுர்தமான கவிதைகள் வடித்த கவிஞர்கள் இலக்கிய வரலாற்றிலுண்டு. இவர்களுள் எஸ். ரி. கோல்டிரிச் என்பவரும் ஒருவர். இவர் ஒரு நாள் அதிகமான அபினை உட்கொண்டுவிட்டு போதை நிலையில் 'குப்பிளாய்க்கான்' எனும் கவிதையைப் படைத்தார்.

அவர் அரைவாசி எழுதிக் கொண்டிருக்கும் போது நண்பர் ஒருவர் அவ்விடம் வந்து முதுகில் தட்டினார். தட்டியதால் வெறி முறிந்தது. கவிதையும் இடையில் நின்றது. போதையில் அக்கவிதை எழுதியதால் சுய நிலையில் அதை அவரால் முடிக்க இயலாது போய் விட்டது. அந்த அரைகுறையான கவிதை இன்று உலகில் ஓர் அழகான முத்து.

---

அண்மையில் நடந்த கலவரத்தின் போது ரயிலில் பலர் தமது உடைமைகளைப் பறிகொடுத்தனர் சிரித்திர ஆராய்ச்சி மணியில் திரு. திக்கவயல் எழுதியதை அரசாங்கம் செயல் படுத்தியிருந்தால் பலரின் உடமைகள் பாதுகாப்பாக இருந்திருக்கும்.

அதை மீண்டும் பிரசுரித்து அரசாங்கத்தை அவ்வாறு செயல் படுத்தத் தூண்டுவது சிரித்திரனின் தலையாத கடமையாகும்.

## ஏன் இந்த இன்னல்?

நமது நாட்டில் எமக்குக் கிடைக்கும் போக்குவரத்து வசதிகளுள் புகையிரதமும் ஒன்று. இந்நாட்டில் மிக நெடுந்தூரப் பிரயாண சேவைகள் இல்லை எனினும் புகையிரத மூலம் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் பல இடைஞ்சலுக்கு ஆளாகின்றனர் என்பது சொல்லாமலே விளங்கும்.

அவற்றுள் பிரதானமானது களவு, தமது உடைமைகளான பணம் நகை, கல்விச் சான்றிதழ்கள் இவற்றை இழந்தவர்கள் அநேகர். இதனால் தமது வாழ்க்கையினை இழந்தவர்கள் தம் விதியை நோவதா, தாம் பிறந்த நாட்டை நோவதா ?

இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு வழி இல்லையா ? உண்டு என்று எனது உணர்வு சொல்கின்றது. தூர இடங்களுக்குச் செல்லும் புகையிரதங்களில் மிக முக்கியமான பொருட்களைக் கொண்டு செல்லும் பிரயாணிகளின் பொருட்களைப் பாதுகாப்பதற்கு ஒரு பொருட் பாதுகாப்பு அறை உண்டாக்கப்பட வேண்டும். அவர்கள் பிரயாணம் செய்து முடிவடையும் நிலையத்தில் அவர்களின் பொருட்கள் திருப்பிக் கையளிக்கப்பட வேண்டும். இதனால் களவைப் பாதுகாப்பது மாத்திரமன்றி மனமுறிவையும் பாதுகாக்கலாம்.

— திக்கவயல் —

## 12 – 6 – 12

பிரபல வித்துவான் பிடில் கச்சேரி செய்து கொண்டிருந்தார். வித்துவான் தன் சாமர்த்தியம் அனைத்தையும் காட்டி அந்த பிடில் வாத்தியத்தில் என்னென்னவோ சப்தங்களையெல்லாம் வாசித்துக் காட்டினார். சுருதி பேதமில்லாமல் நாதஸ்வர இசையையும், குழல் ஓசையையும் தனது சாமர்த்தியத்தால் வாசித்துக் காட்டிய வித்துவானுக்குப் பெரும பாராட்டுக் கிடைத்தது.

முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டு ரசித்த பெரிய மனிதர் ஒருவர் கச்சேரி முடிந்ததும் வித்வானிடம் சென்று ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக "நீங்கள் வாசிப்பதைப் பார்த்தால் பிடில் வாசிப்பது வெகு சுலபம் போல் தோன்றுகிறதே !" என்றார்,

வித்துவானும் "ஆமாம்" என்பது போல் தலையசைத்தார்.


"அப்படியானால் எவ்வளவு நாட்களில் பழகிக் கொள்ளலாம் ?" என்று ரசிகர் கேட்கவே, வித்துவானும் சாவதானமாக ,'பனிரெண்டு—ஆறு —பனிரெண்டு," என்றார். "என்னது ?" என்று ரசிகர் கேட்க வித்துவான், "ஒரு நாளில் பன்னிரெண்டு மணி நேரம் — வாரத்தில் ஆறு நாட்கள், பன்னிரெண்டு வருடங்கள் தொடர்ந்து பழக வேண்டும் அவ்வளவு தான்." என்றார்.

---

அமெரிக்காவில் அரசாங்க அலுவலகமொன்றில் எழுதியிருந்தது.

"தயவு செய்து தேனீர் வேளை வீடு போகாதீர்கள்"

---




ஐயா... சாமி...... கல்யாண ஆசையாயிருக்கு... 1 லட்சம் சீதனமும், 50 ஆயிரம் டொனேஷனும் தாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவ மொழி



மீன் நனையுதென்று கழுதை அழுததாம்,

பெண்களின் ஆடைக் குறைப்பை அவதானித்த குருவானவர் தேவாலயத்தில் ஒரு அறிவித்தல் எழுதித் தொங்க விட்டிருந்தார்

"இங்கு நீச்சல் குளமில்லை"

தந்தை : நான் புத்தி சொல்கிறேன்... நீ காதைப் பொத்திக் கொண்டு நிற்கிறுயே... முட்டாள்.

மகன் : நீங்கள் சொல்வதை செய்து காட்டுங்கள் பின்பற்றுகின்றேன்.

— ஜோக்கிரட்டீஸ்

கணவன் வீடு வரும் போது ஒரு நாய் ஒன்றை விலைக்கு வாங்கி வந்தார். அதைப் பார்த்த பிள்ளைகள் "இதற்கு என்ன பெயர் வைக்கலாமெனக் கேட்டார்கள்" அதற்கு குழந்தைகளின் தாய் "அம்மா என்று அழையுங்கள்... நான் வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்" என்ருள்.

ஒருவர் : இப்போ வானத்தில் முகிலைக் காண முடிவதில்லை... ஆகாய விமானங்களைத்தான் காணக் கூடியதாக இருக்கு.


சுன்னுகம் நவீன சந்தையில்

**அண்ணு கோப்பி**

நிறுவனத்தினர் ஓர் விற்பனை நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.

அருஞ்சுவையும் அகமகிழ்வும் தருவது

# அண்ணு கோப்பி

தயாரிப்பாளர்:—

அண்ணு தொழிலகம், இணுவில்.


# திரைக் கூச்சம்

"பாசமலர்" படத்திற்கு சென்றிருந்தேன். அதில் சிவாஜி, சாவித்திரியின் அண்ணன் தங்கை பாசப் பிணைப்பு உள்ளத்தைத் தொட்டது. நான் சிவாஜியாகவும், என் தங்கை சாவித்திரியாகவும் கற்பனை செய்து கொண்டேன். தங்கையை படத்திற்கும் அழைத்துச் சென்றேன்.


அதன் பிறகு —

அடுத்த ஒரு படத்திற்குச் சென்றிருந்தேன். "எல்லாம் உனக்காக" தந்தை மகளின் பற்றுதலை எடுத்துக் காட்டும் அருமையான படம். ஆனால் அதனை என்னல் ரசிக்க முடியவில்லை. காரணம் நான் 'பாசமலர்' படத்தில் அண்ணன் தங்கையாகப் பார்த்தவர்களை -- இதில் கணவன் மனைவியாகக் கண்டேன் ஏதோ ஒரு வித கூச்ச உணர்வு என்னை வாட்டியது. அந்தப் படத்திற்கு எனது தங்கையை அழைத்துச் செல்ல ஏனோ என் மனம் விரும்பவில்லை.

சிலர் பாத்திரப் படைப்புக்களை இப்படிக் குழப்பிக் கொள்வதால் தான் நல்ல சில கதை அமைப்புக் கொண்ட படங்களும் தோல்வியைத் தழுவுகின்றதா?

● வாசகர்களே நீங்களும் இப்படியான கருத்துக்களை சுவையான கட்டங்களை உங்கள் உணர்ச்சியைத் தொட்ட பாத்திரங்களை எழுதி அனுப்புங்கள்.

— வியாஸ்



"உள்ளூராட்சித் தேர்தல் வரப் போவதால் ஒரு நன்மை ஏற்பட்டு உள்ளது,

"என்ன நன்மை'??

"தேர்தல் கலவரம் எல்லாம் உடனடியாக அடங்கிப் போச்சு"

— திக்கவயல் —

மனைவி : எங்க மகன் ஒரு பற்றற்றவன்.

கணவன் : யார் சொன்னது.

மனைவி : அவனின் வகுப்பு "ரிப்போட்" சொல்கிறது.

— அதிமதுரம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே**கமாக ஓடுகின்ற வாகனங்கள் — அவசரமாக மனிதர்கள் — வியாபார ஒலிகள் — இரைச்சல்கள் — எல்லாவற்றின் தாக்கமும் ஓரளவு குறைந்து விட்ட இரவுப் பொழுது.

இன்னும் ஐந்து நிமிடம் நகர்ந்தால் பதினொரு மணியாகிவிடும்.

மணிக்கூட்டுக் கோபுரத் தடிக்கு நேரெதிரே உள்ள பிரபல்யமான ஹோட்டலொன்றின் வாயிலில் சுகுமார் நின்றான்.

கலைவிழா வொன்றில் பங்கு கொண்டுவிட்டு வந்து அவன் அதில் நின்றான்.

# மனிதர்கள் வாழ்கிறார்கள்?

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களைப் பற்றி அவன் பேசிய பேச்சுக்கள் அந்தச் சபையை எவ்வளவு தூரம் ஈர்ந்துள்ளது என்பது அவன் பேசும் போது சபையில் நிலவிய மௌனத்தில் இருந்தே தெரிந்து கொள்ள முடியும். அவன் தன் பேச்சுக்களை நினைவு படுத்தி மகிழ்ந்து கொண்டான்.

அமைதியான இரவுப் பொழுதில் தன்னந் தனியனாக நின்று கொண்டு அந்த ரவுணின் இரவு நடப்புக்களை ஆழமாகக் கவனிக்கிறான்.

பெரிய ஹோட்டல்களோடு போட்டி போட முடியாத சின்னஞ் சிறு கடைகள் 'இரவு கடை' என்ற பெயரில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திறந்திருக்கின்றன.

பெரிய ரவுணாகையால் மனித நடமாட்டம் இருக்குமென நம்பி அந்த இரவு கடைகள் இயங்குகின்றன.

'பெரிய கடைகள் இரவில் சுரண்டுகின்றன. போதாக் குறைக்கு இவை வேறு இரவில் சுரண்டுகின்றன! சுகுமார் எண்ணிக் கொண்டான்.

அவன் எண்ணம் நியாயமானது தான்!

அந்த அமைதியான நேரத்தில் எழுப்பிய இடைவிடாத இருமல் ஒலி சுகுமாரின் சிந்தனையைக் கலைத்தது.

சாக்கொன்றால் உடம்பின் பெரும் பகுதியைப் போர்த்துக் கொண்டு பேமென்டில் படுத்துக் கிடக்கிற அந்த மனிதன் தொடர்ந்து இருமுகிறான்! அவனுக்குப் பக்கத்தில் ஒருத்தி!

சுகுமாரின் கண்கள் கலங்கி விட்டன. பேமென்டில் வாழும் அளவுக்கு அவர்களை ஒரு வர்க்கம் உறிஞ்சி இருக்கிறது. வயத்தில் வாழ முடியாமல் பேமென்ட்டில் அவர்கள் இறங்கி விட்டார்கள். தஞ்சம் புகுந்து கொண்டார்கள்! உழைத்தவர்கள் — பனிமழை என்று பாராமல் கஸ்டப்பட்டவர்கள் — மேமென்டில் வாழுகிறார்கள்! உழைப்பு வாங்கியவர்கள் — ?

சுகுமார் அவளை மெதுவாக நோட்டம் விட்டான் எல்லாம் துறந்த நிலை என்று சொல்லுமளவுக்கு அவள் எந்த ஒன்றிலுமே அக்கறை இல்லாமல் இருப்பது தெரு விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் தெரிகிறது.

அவளை றோட்டால் செல்லுகின்ற சிறுவனும் பார்க்கிறான். குமரனும் பார்க்கிறான். கூடவே மனைவியினதும் காதலியினதும் உள்ளங் கையை அழுத்திச் செல்கின்ற புருஷனும் — காதலனும் பார்க்கிறான் — கள்ளமாக!

அவள் அப்படி இருக்க பலவீனமானவர்கள் பார்வையால் பசி தீர்க்கிறார்கள்.

சுகுமாரென்ன? அவனும் பலவீனமானவன் தானே

''சே—! இப்படியா இருக்க வேண்டும்'' உள்ளதைக் கொண்டு ஒழுங்காக உடுத்து இருக்கலாமே என்று சுகுமாரின் மனம் எண்ணிக் கொண்டது.

தன்னை ஒரு கணம் சதை உணர்வுக்கு பலியிட்டுக் கொண்ட சுகுமார் சுயாதீன நிலைக்குத் திரும்பினான்.

அவர்கள் அப்படி ஏன் வாழுகிறார்கள்? அப்படித் தான் ஏன் வாழ வேண்டும்.

சமுதாயத்தின் ஒரு பிரிவின் சுரண்டலால் தான் அவளும் அவளைச் சார்ந்தவர்களும் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். என்பது அவனுக்குத் தெரியும். கலைவிழாவில் கூட அப்படித்தான் அவன் பேசினான்.

ஆனால் அலட்சிய மனப்பான்மைக்குக் காரணம் சுரண்டல் மட்டும்தான் என்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

ஒரு பொருளை இரண்டு விதமாக விற்க முடியும் என்பது சுகுமார் அறியாததல்ல. தட்டுப்பாடான பொருட்களை மறைந்து வைத்து விற்கலாம். மலிந்த பொருட்களை 'சோ' பண்ணி விற்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மலிந்தவர்கள் — !

'மலிந்தவளைப் பார்த்துக் கொண்டிருந்த சுகுமாரை வைத்த கண் வாங்காமல் இரண்டு பெண்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இருவருக்கும் நாற்பது வயதிருக்கும்! வேணுமென்று அலங்காரம் செய்திருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

அவர்களில் ஒருத்தி சுகுமாரைப் பார்த்துச் சிரிக்கிறுள். தூண்டில் போடுகிறுள்.

அவனும் சிரிக்கிறுன். அவன் சிரிப்பில் எந்த விதமான கள்ளமும் இல்லை.

அவள் அவனை நோக்கி மெல்ல நகர்கிறுள். அவன் உடலெல்லாம் பதறுகிறது. முகம் வியர்க்கிறது. அவள் எதற்காக வருகிறுள் என்பதை ஊகிக்க அவனுல் முடியவில்லை. 'அப்படியும்' இருக்குமோ? அவனுக்கு ஏதோ போல இருந்தது.

பஸ் ஸ்ராண்ட் பக்கமாகவே மணிக்கூட்டுக் கோபுரப் பக்கமாகவோ மெல்ல நழுவுவோமா என்று மனம் அங்கலாய்க்கிறது. அவன் கால்கள் அடியெடுத்து வைக்கத் துடிக்கின்றன. அவன் பார்வை கூட மணிக்கூட்டுக் கோபுரப் பக்கமாகத்தான் செல்கிறது.

மணிக்கூட்டுக் கோபுரத்தடிக்கு வடக்குப் புறமாகச் செல்கின்ற அந்த ரேட்டிற்குச் சமீபமாக ஒரு அரசமரம். அந்த அரசமரத்தினடியில் சின்னஞ் சிறு புத்த கோயில். அரசமரத்திற்கு முன்னே அந்த 'ரவுண்' தியேட்டர்களில் ஓடுகின்ற சினிமாப் படங்களின் விளம்பரங்கள். அந்தப் பகுதி மனிதனுெருவனின் அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றத் தேவையற்ற



ஒருவர் : எனக்கு ஊர் வம்பு பிடிக்காது.

மற்றவர் : நல்ல பண்பு

ஒருவர் : ஆனுல் எனக்குத் தெரிந்தவர்களைப்பற்றி வம்பு தும்பு பேசுவது பிடிக்கும்.

புறம்பான ஒரு பகுதி என்பது அந்த ரவுணைப்பற்றித் தெரிந்தவர்களுக்குத் தெரிந்த ஒன்று.

என்றுலும் கூட சுகுமாரைப் போல ஒருவன் சுகுமாரின் வயதினன் — அந்தப் பகுதியில் இருந்து வந்து அந்த ரேட்டில் ஏறுகிறுன்.

## சாகஸக்காரி

காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிய கணவன் மனைவி ஏதோ கவலையான செய்தி சொல்லப் போகிறுள் என்பதை உணர்ந்து தயவு செய்து கவலையான செய்தி ஒன்றும் சொல்லாதே... ஏதும் சந்தோஷமான செய்தி இருந்தால் கூறு என்றூர். அதற்கு மனைவி ''எங்கள் ஏழு பிள்ளைகளுள் ஆறு கையை முறித்துக் கொள்ளவில்லை என்றுள்.

## பாரி வள்ளல்

அன்று யாழ்தேவி ரயிலில் ஒரே சனக்கூட்டம் கொழும்பிலிருந்து நின்று பிரயாணம் செய்து வந்த பெண்ணை உட்கார்ந்திருந்தவர் பார்த்து ''நான் நாவற்குளியில் இறங்குகின்றேன்... பின் நீங்கள் நான் இருக்கும் இடத்தில் உட்காரலாம்" எனக் கூறினுர்.

இருண்ட பகுதியில் இருந்து வந்து வெளிச்சத்தை அனுபவிப்பதால் ஏற்பட்ட கூச்சமோ என்னவோ அவன் முகத்தில் ஒரு கூச்சம் — ஒரு வித களைப்பு — களைத்த முகத்தில் முழுமையாகத் தெரிகிறது.

பெல்பொட்டத்தைச் சரி செய்து கொண்டு அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறவனை சுகுமாரின் கண்கள் கவனிக்கின்றன.

அந்த நேரத்தில் அவனுக்கு அங்கு என்ன வேலை? அவன் யாரை எதிர்பார்க்கிறுன்?

சுகுமாரை நோக்கி வந்தவள் சுகுமாருக்கு முன்னே வந்துவிட்டாள். மற்றவள் — ?

பெல்பொட்டம் அணிந்து கொண்ட அந்த வாலிபனை நோக்கி அவள் வேகமாக நடக்கிறுள்.

அவள் சிரிக்கிறுள். அவனுல் சிரிக்க முடியவில்லை. அவன் ஏதோ கொடுக்கிறுன். அதை வாங்கியவள் சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டு பழைய இடத்துக்கே வருகிறுள்.

சுகுமார் அங்கு வந்து நின்றதற்கிடையில் அவள் ஐந்தோ ஆறு பேரிடம் அப்படி என்னவோ வாங்கிவிட்டாள். அப்படி என்றுல் — ? சுகுமார் பிடரியை மெதுவாகச் சொரிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெல்பொட்டத்திற்கும் அவளுக்கும் என்ன சம்பந்த மென்பது அவனுக்கு விளங்கவே இல்லை.

சுகுமாருக்கு முன் வந்து நின்றவள் மெல்லச் சிரித்தாள். அது வியாபாரச் சிரிப்பு !

''ஐயா, நேரம் என்ன ? '' சுகுமாரை அவள் கேட்டாள்.

''பதினொண்டு பதினைந்து''

''எங்கத்தாலை வந்து...'' இழுத்தாள் அவள்.

''கலைவிழாவொண்டிலை கலந்து போட்டு வாறன்''

''எங்க போக வேணும்.''

''தெல்தெனியவுக்கு''

''இனி ஒண்டே காலுக்குத்தானே பஸ்''

''தெரியும்''

''ஒண்டே கால் மட்டும் இதிலேயா நிற்கப் போறீங்க. கால் அரக்காது — ?

''என்ன செய்யிறது நிண்டுதானே ஆக வேணும். அதிருக்க இந்தக் கேள்வியெல்லாம் உனக்கெதுக்கு—?'' கடுமையாகத்தான் கேட்டான்..

''இல்லைத் தம்பி... ஒண்டரை மணித்தியாலத்துக்கு மேலை கிடக்கு...''

''கிடக்கட்டுமே...''

''பாத்தால் மாப்பிளை மாதிரி... ஒண்டும் விளங்காத மாதிரி... இஞ்சை வாரும்...'' கையைப் பிடித்து இழுக்காத குறையாக சுகுமாரை அழைத்தாள் அவள்.

தளர்ச்சி அடையாத உடல். கட்டான உடம்பு. எங்கெங்கே கூட வேண்டுமோ அங்கங்கே கூடி எங்கெங்கே குறைய வேண்டுமோ அங்கே குறைந்து...

அவள் நடந்தாள். அவன் பின் தொடர்ந்தான். அவர்கள் நடந்த தெரு — ?

சுகுமார் நின்ற கோட்டலுக்கு பக்கமாகச் செல்லுகின்ற சின்னஞ் சிறு தெருத்தான். அந்தத் தெரு — ?

பரந்து வளர்ந்து நிற்கும் மரங்களிற் கூடாகத்தான் அது செல்கிறது. அந்த மரங்களுக்குள் மறைந்து கிடக்கிறது அறுபது அடி நீளக் கட்டிடம் ஒன்று. ஐந்தாகப் பிரிக்கப்பட்டுள்ள அந்தக் கட்டிடத்தில் ஏறக்குறைய ஏழெட்டுக் குடும்பங்கள் வாழ்கின்றன.

ஒரு அரசியல்வாதி ஐம்பது அறுபது வோட்டாவது அந்தப் பகுதியில் இருந்து பெற முடியும்.

அவர்களின் வாழ்க்கை முறை — ?

பொது மலசல கூடத்திற்கு வெளியே உள்ள ஒரு தண்ணீர் பைப்தான் அவர்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் பாவிக்கிறுர்கள்.

ஒரே நேரத்தில் பலர் குளிப்பார்கள். ஒரு பாலர் தான் ஒரே நேரத்தில் குளிப்பார்கள் என்பது இல்லை. இருபாலரும் குளிப்பார்கள். அதில் பல வயதினர் இருப்பார்கள் !

வசதியற்ற சூழலால்தான் அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை முறை அருவருப்பைத் தரக் கூடிய முறையில் மாறி இருக்கிறது என்ற முடிவுக்கு நிச்சயம் வர முடியாது.

அணிந்து கொள்வதற்குத் தேவையானதும் போதுமானதுமான துணி இருந்தும் கூட எல்லாம் துறந்த நிலையில் ஒன்றிலுமே பற்றற்று சுகுமார் நின்ற கோட்டலுக்குப் பக்கத்தே இருப்பவளைப் போல அவர்கள் இருக்க வேண்டிய காரணம் — ?

அவர்கள் வசதியற்ற வீட்டில் வாழ்ந்தாலும் கூட குடும்பமாக வாழுபவர்கள். எல்லாமே துறந்த நிலையில் வாழ்பவள் எல்லாவற்றையும் இருந்த நிலையில் லயத்தில் இருந்து 'பேமென்ட்'க்கு இறங்கி விட்டவள். தஞ்சம் புகுந்து கொண்டவள் அவள் எப்படியும் வாழலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவள். இவர்கள் அவளைப்

---

## — சக்தி

நீரின் மேலே,
பல வர்ண,
நிறம் காட்டி,
மிதக்கிற,
மண்ணெய்,
தன் அழகைப் பற்றிப்
பெருமை பேசியது நீரிடம்
அதற்கு —
மௌனமாக நீர் கூறியது;
''வெளிப் பார்வைக்கு நீ
அழகுடன் திகழ்வதற்கு,
ஊனைத் தாங்கி நிற்கும்,
அடர்த்தி கூடிய,
திரவமாகிய,
நானே காரணம்—'' என்றது.

— தாஹிர்

## பேறு

பந்தம் பிடித்துப்
பெற்ற பெரும் பதவி
வேலையற்ருேர் சந்தோரில்
வேலையற்ருேர் பேர்பதியும்
Casual Clerk.

— சி. சதாசிவம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல அனுதாபத்துக்குரியவர்களென்றாலும் கூட இப் படித்தான் வாழ வேண்டுமென்ற நியதி அற்றவர்கள்

சுகுமாரைக் கூட்டி வந்தவள் அவனுக்குச் சமீப மாகின்றாள். ஒரே இருள்! அவர்கள் இருவரும் பிர தான வீதியில் இருந்து குறுகிய தூரத்தில் நின்றாலும் கூட தெரு விளக்கின் ஒளிச்சிதறல்கள் கூட அங்கே விழவில்லை.

"தம்பிக்கு பதினெட்டோ இருபதோ"

"எனக்கு இப்ப இருபத்தைந்து" அவள் கலகல வென நகைத்தாள்.

ஒவ்வொரு தொழிலைப் பொறுத்துத்தான் பேச்சு முறையும் அமையும். அவளின் தொழில் முறையில் அவனுக்கு அனுபவமில்லையாதலால் தான் அவன் தன் னுடைய வயதைச் சொன்னான்.

அவள் கேட்ட கேள்வி?

அவளின் சிரிப்புக்குக் காரணம் விளங்காமல் அவன் திகைத்து நின்ற போது அவனை எதனாலேயோ உரசிய படி அவன் 'பொக்கற்' றில் இருந்து பத்து ரூபாத் தாளை வெகு உரிமையோடு எடுத்துக் கொண்டாள். எடுத்துக் கொண்டவள் சுகுமாரைக் கூட்டிச் சென்று அந்த அறுபது அடி நீளக் கட்டிடத்தின் அறையொன் றின் முன்பே நிறுத்திக் கதவைத் தட்டி விட்டு வந்த வழியே நகர்ந்தாள்.

சுகுமாருக்கு விளங்காதவை ஓரளவு விளங்கின. அவன் வயது வந்த வாலிபன். அவன் முனிவரல்ல. அவனுக்கு உணர்வுகளும் இருக்கின்றன. உணர்ச்சிகளும் இருக்கின்றன. பலவீனம் நிறைய உள்ள சாதாரண மனிதன் தான் அவன்.

அவன் திறக்கப்படாத கதவின் முன்னே நின்றான் என்ன நடந்துவிடப் போகிறது. பார்த்து விடுவோமே என எண்ணிக் கொண்டான்,

கதவு திறந்த போது கைவளையல் குலுங்கின. சுகந்த மணம் மெல்ல வீசியது. மை பூசிய கண்கள் உள்ளே அழைத்தன. சுகுமார் நுழைந்தான். சிறிய அறையென்றாலும் அழகாக இருந்தது. சுற்றுப் புறத் தின் சகிக்க முடியாத நெடிலை இவ்வளவு நேரமாகத் தாங்கிக் கொண்டிருந்தவனுக்கு அந்த அறையில் வீசிய சுகந்த மணம் இதமாக இருந்தது. அவன் நிம்மதியாக மூச்சு விட்டான்.

நெஞ்சில் புரண்ட பின்னலை அலட்சியமாகப் பின்னே வீசியபடி மெல்ல நடந்தவள் தரையில் விரிக் கப்பட்டிருந்த பாயொன்றின் மேல் குந்தி இருந்தாள். முழங்காலில் முகத்தை வைத்துக் கொண்டு முழங்கால் இரண்டையும் கையிரண்டாலும் வளைத்துப் பிடித்த வாறு அழகு காட்டினாள். கண் இமைகள் படபடத்தன.



# நகை

கொள்ளைக்காரரை ஒழிக்க வேணுமென்று பேசித் திருந்தியே... இப்போ அந்தக் கொள்ளைக் காரனைக் கண்டு மரியாதை பண்ணுறியே!

சத்தம் போடாதே... அவரின் மகள் என்னைக் கொள்ளை கொண்டு விட்டாள்.

---

கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறாயே... இதுதானா நீ வேலை செய்வதின் இலட்சணம்.

எனக்கு முன்னிருக்கும் இலட்சணமான பெண்ணை மாற்றி விடுங்க கொட்டாவி நின்று விடும்.

---

ஒருத்தி : தம்பி... அம்மா கடன் காசு தர வேணும் வீட்டில் இருக்கிறாவா.

சிறுவன் : அம்மா வீட்டில் இல்லை... வந்திடுவா வருமளவும் அந்த நாற்காலியிலிருந்து திட் டிக் கொண்டிருங்க.

— அதிமதுரம்

---

சுகுமார் மெல்ல நடந்து பாயின் ஓரமாக உட்கார்ந் தான். குறுநகை புரிந்தவாறு அவனுக்குச் சமீபத்தில் நகர்ந்தாள்.

பழம் அழகாக இருந்தால் பசி இல்லாதவன் கூட ஒரு தடவை கடிக்க ஆசைப்படுவான். பழம் அழகா னதுதான். என்றாலும் கொந்திய பழமாச்சுதே! அதைக் கிளியும் கொத்தியிருக்கும். காகமும் கொத்தி இருக்கும்!

அவள் சுகுமாரின் தோளில் கை போட்டாள். வெட்கப்பட வேண்டியவர்கள் வெட்கத்தை விட்டுவிட் டார்கள்!

"உங்க பேரு—"

"சுகுமார்"

"உன் பேரு"

"கயல் விழி"

"அழகான பேரு தான். ஆளும் அப்படித்தான் வயசென்ன"

"பதினெட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏதாவது படிச்சிருக்கிறுயா —"

''இல்லே"

''ஏன் — அம்மா படிப்பிக்கேல்லேயா ?

''உஹு''ம்''

''ஏன் வசதியில்லேயா ? ''

''இந்த நேரத்தில் ஏனுங்க இந்தக் கதையெல்லாம்"

''இந்த முடிவுக்கு ஏன் வந்தாய் ? ''

''பிழைக்கணுமே''

''நல்லது அம்மா என்ன செய்யிறு ? "

கயல் விழி மௌனம் சாதித்தாள்.

''நான் கேட்கிறேன் என்று கோபிக்காதே. அம்மா கூட இப்படித்தானே''

கயல் விழி ஒன்றுமே பேசவில்லே.

''அம்மா அப்படிப் போயும் உன்னே வ ச தி யாக வைக்க முடியாமல் போட்டுதா ? ''

கயல் விழி ஒன்றுமே பேசவில்லே.

''கயல் விழி நான் கேட்டுக்கிட்டே இருக்கிறேன் நீ—? '' அவளே அவன் பார்த்தான்.

'தேவை காசு. என்ன தொழில் செய்தால்ளென்ன'

சுகுமார் தள்ளி இருந்து கொண்டான். கலேவிழா வில் அவன் பேசிய பேச்சுக்களில் அர்த்தம் இருப்பதாக அவனுக்குப் படவே இல்லே.

வறுமையும் வேலேயின்மையும் தான் மனிதர்களே இந்த நிலேக்குக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது என்று எண்ணி இருந்தது எவ்வளவு தவருகப் போய் விட்டது ? கயல் விழி அந்த நிலேக்கு வரத் துணிந்தது வறுமையாலும் வேலேயின்மையாலும் தானென்று அவ னுல் நம்ப முடியாமல் இருந்தது.

கயல் விழியின் தாய் கயல் விழியையும் சகோத ரங்களேயும் வாழச் செய்வதற்குத்தான் அப்படி ஒரு தொழிலில் இறங்கி இருந்தாளென்ருல் கயல் விழியும் அப்படி ஒரு தொழிலில் தான் இறங்க வேண்டி வந்த மர்மமென்ன ? பிரயோசனம் என்ன ?

கயல் விழியின் தாயின் முடிவால் தனது பிள்ளே களின் ஆசைகளேயும் தேவைகளேயும் பூரணமாக நிறை வேற்ற முடியாத போது கயல் விழி அதே தொழில் செய்வதால் என்ன பிரயோசனம் ?

சமுதாயம் இந்த நிலேக்கு வந்தது காரண்டலால் தானென்ருல் அந்த நிலேக்குத் தள்ளப்பட்டவர்கள் என்ன செய்கிருர்கள் — ?

சுகுமாரால் யோசிக்காமல் இருக்க முடியவில்லே.

பெரிய இடத்தில் நடக்கின்ற பிழைகள் பெரிதாக எழுத்தாளர்களாலும் மற்றவர்களாலும் படம் பிடித் துக் காட்டப் படுவதும் கயல் விழியைப் போன்றவர் களின் நடப்புகள் அனுதாபத்துக்குரியன போ ல வு ம் வெளிக் கொணர்வது நடுநிலேமையானதா எ ன் ப து அவனுக்குச் சந்தேகமாக இருந்தது.

கயல் விழியைப் பார்த்தவாறே சிந்தனேயில் மூழ்கி விட்ட சுகுமாரின் சேட் பொத்தான்களே ஒவ்வொன் ருக கழற்றத் தொடங்கினுள் கயல் விழி.

''கொம்மா எங்கே ? ''

''அம்மாவும் மாமியும் கோட்டலடியில் இருந்தி ருப்பினமே''

● எமக்கு நாம் செய்த குற்றங் களே நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டால் சிலரே தூக்குத் தண் டனேயிலிருந்து தப்புவார்கள்.

## சிரிக்கிரு

● சிலருக்கு சூழ்நிலேக்கு ஏற்ப மாறும் வ ல் ல மை யை த் தவிர வேறு வல்லமை இல்லே.

மனேஜர் : கந்தோரில் தூங் கினுல் எப்படி வேலே செய்வது.

கிளார்க்: என் எடை குறை ந்து கொண்டு போகிறது. டாக் டர் பகலில் இருபது நி மி ட ம் தூ ங் கி ன ல்பருமனுகலாமென்று கூறினர்.

— லோமா

எழுத்தாளன் :''பணக்காரனு வது எப்படியென்று'' நான் எழு திய புஸ்தகம்... ஏழு ரூபாதான்

ஒருவர் : உங்களுக்குப் பணக் காரனுவது எப்படியென்று தெரி யும்... உ ந் த ப் புத்தகத்தைச் சும்மா தாருங்க.

எப்படி உங்களுக்குள் காதல் ஏற்பட்டது ?

நான் அவர் காரைக் காதலித் தேன்... அவர் என் கார் மேகக் கூந்தலேக் காதலித்தார்.

— அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படி எண்டால்"

''உங்களைக் கூட்டி வந்தது மாமி''

''காசு வாங்கிறது கொம்மாவே, என்ன ? அவர்களின் வியாபாரத்திற்கு உன்ரை உடலும் எங்களின்ரை பலவீனமும் முதல், என்ன ?'' எழும்பி நின்றவாறு சுகுமார் கேட்டான் ஆத்திரமாக.

அவள் விக்கித்துப் போனால். அவளுக்கு அவனின் பேச்சு புது அநுபவம். உடல் தேடி வந்தவன் உள்ளத்தைப் பற்றிக் கதைக்கிறான்: அவள் அப்படி நினைத்துக் கொண்டாள்.

''அப்ப ஏன் இங்க வந்திங்க— ?''

''பொத்து வாய் ! எடியே— ! கொம்மா உன்னை வைச்சு என்ரை பலவீனத்தை வைச்சு உழைக்கிறாள். நாளைக்கு நீ உன்ரை பிள்ளையை வைச்சு என்ரை மகனின் பலவீனத்தைப் பாவிச்சு உழைக்கப் போறாய். எங்களின்ரை பலவீனம் உங்களின்ரை வியாபாரத்துக்கு முதல். உங்களின்ரை கோலங்கலால் ஏற்படுகின்ற அனுதாபம் உங்களுக்குப் பாதுகாப்பு. எடியே— ! நீ, நானெல்லாம் மனிசர்களடி. எப்படியும் வாழலாமெண்டு வாழக் கூடாது. இப்படித்தான் வாழ வேண்டுமெண்டு வரப்பு கட்டி வாழ் வேணுமடி. வறுமையெண்டால் சௌகரியத்தைக் குறைச்சு வாழனும். சௌகரியமாக வாழுகிறதுக்காக சௌகரியத்தையே அழிச்சுக் கொள்ளக் கூடாது. விளங்கிச்சுதா ?

''கயல் விழி—ஒண்டேஒண்டு கேட்கிறன். கொம்மா இதே தொழிலைச் செய்து உன்னை சௌகரியமாக வைக்க முடியவில்லை. நாளைக்கு அதே தொழிலைச் செய்வதால் உன்ரை பிள்ளையை நீ சௌகரியமாக வைச்சுக் கொள்ள முடியுமா— ?''

கயல் விழி மலைத்துப் போனாள். அவள் மாறினாளோ மாறவில்லையோ சுகுமார் பலவீனத்துக்கு அடிமையாகவே இல்லை !

கதவை அவசரமாகத் திறந்து கொண்டு வேகமாக நடந்தான். அரச மரத்தடியால் நடந்து மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு வடக்காகச் செல்லும் றோட்டில் அவன் ஏறிய போது காசுக்காகக் காத்து நின்றாள். கயல் விழியின் தாய் — இல்லை பேய் !

அவள் சுகுமாரை நெருங்கினாள்.

''நீயும் தாயோடி— ? உப்பிடித்தான் வாழவேணுமோடி?" ஆத்திரமாகக் கேட்டுவிட்டு அவன் ஓடுகிறான்.

(நடை முறையில் சில கற்பனை)

நிறைவு.

## இடப் பரப்பு

பருத்தவர் : நிற்கும் பெண்ணிற்கு உன் ஆசனத்தைக் கொடுத்தால் என்ன ?

சிறுவன் : நீங்கள் எழுந்து இரு பெண்களுக்கு ஆசனம் கொடுத்தால் என்ன ?


நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப்
பெறுமதியானவை 'மில்க்வைற்'
தயாரிப்புக்களே !

mws
மில்க்வைற்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவாகும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம், தொலைபேசி : 7233


ஒரு ''ஜெட் விமானம் பறந்து போவதைப் பார்த்த பறவை,, மற்றப் பறவையிடம் ''உனது வால் எரியும் போது உன்னால் பறக்க முடியுமா'' எனக் கேட்டது.

□ □ □

ஒரு ஞாபக மறதி உள்ள விவசாயிதனது கோழிகளுக்கு மரத்தூளை உணவாகக் கொடுத்தார். அந்தக் கோழிகள் பத்து முட்டை இட்டன. அந்த முட்டைகள் அடை வைத்துப் பொரித்த போது ஒரு குஞ்சு மரங்கொத்தியாகவும் மீதிக் குஞ்சுகளுக்கு மரக்கால்களும் இருந்தது.

## சிங்க உண[ர்]வு

ஒரு காட்டின் மத்தியில் ஒரு முதலாளியும் தொழிலாளியும் சந்தித்தனர். ''நான் காட்டின் மத்தியில் தொழிலாளர் வர்க்கத்தை மறந்து நிம்மதியாக சற்று நேரமிருப்பதற்கு வந்தேன். நீ ஏன் இங்கு வந்தாய்'' எனக் கேட்டார் முதலாளி. ''நான் முதலாளி வர்க்கத்தை மறந்து நிம்மதியாக இருப்பதற்கு இங்கு வந்தேன்'' எனப் பதில் கூறினான் தொழிலாளி. இவர்கள் இருவரின் பேச்சை பற்றைமறைவிலிருந்து கேட்டுக் கொண்டு நின்ற சிங்கம் கூறியது ''கவலைப் படாதையுங்கள்... உங்கள் இருவரையும் எனக்குப் பிடிக்கும்'' என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபவாசமும் உரிமையும்

அரசியல் வாதிகள் தமது உரிமைப் போராட்டத்திற்கு உண்ணாவிரதத்தையும் ஓர் ஆயுதமாகப் பாவிக்கின்றனர். இப்போராட்டத்தில் உயிர் பிரிந்தவர்கள் பலர்.

★ இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது சிறைக் கொடுமைகளை எதிர்த்து ஜிதேந்திரநாத் உண்ணாவிரதம் இருந்தார். அவர் 63-வது நாளில் தனது உயிரைப் பலி கொடுத்தார்.

★ ஆந்திர மாகாணத்தைப் பிரித்துத் தர வேண்டுமென்று 1953-ல் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் உண்ணாவிரதம் இருந்தார். அவர் 58-வது நாள் உயிர் நீத்தார்.

★ சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று சங்கரலிங்கம் நாடார் உண்ணாவிரதம் இருந்தார். அவர் 78-வது நாளில் உயிர் நீத்தார்.

★ அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக அதிக நாள் உண்ணாவிரதம் இருந்து உயிரைத் தியாகம் செய்தவர் எனரன்ஸ் மாக்ஸ்வினி என்பவர் இவர் 200 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து தனது உயிரைத் தியாகம் செய்தவர்.

## திரைப் ப(ா)டம்

அரசாங்கம் வெளியிட்டுள்ள ஐந்தாவது வகுப்புப் பாடப் புஸ்தகத்தில் திரைப்பட நட்சத்திரங்கள் தர்மேந்திரா, ஷீஜைசந்தர், வர்கர் ஆகியவர்களின் படங்களையும் அவர்களைப் பற்றிய வரலாறும் அச்சிட்டுள்ளார்கள். இதை ராஜஸ்தான் அரசாங்கம் செய்துள்ளது.

## சிரித்திரு


மனேஜர்: டைம் கீப்பர்... உன்னை டிஸ்மிஸ் செய்யப் போறேன்... நீ வேலைக்கு லேட்டா வந்தனி.

டைம் கீப்பர் : மன்னிக்க வேணும் சார்... ஒரு அழகியைப் பார்த்தாப்போலே டைமை மறந்திருந்திட்டேன்.

ரசிகன் : உங்கள் நாடகங்களின் வெற்றிக்குக் காரணம் என்ன ?

நாடகாசிரியர் : எனது நடிகர்கள் விவேகமானவர்கள். எனது வசனங்களை அவர்கள் திருத்திப் பேசி ஒப்பேற்றி விடுவார்கள்.

— அதிமதுரம் —



உலகம் அழிந்தால் நல்லது.

ஏன்டா அபசகுனம் அப்படிச் சொல்லுகிறாய் !

பூமி சாஸ்திரப் பாடம் இல்லாமல் போய் விடுமெடா.

உனது முன்னோரை உனக்குத் தெரியுமா ?

தெரியாது...

தெரியாவிடின் அடுத்த தேர்தலில் போட்டியிடு. உன்னோடு போட்டியிடுபவர் மேடையில் பகிரங்கமாகக் கூறக் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## யதார்த்தம்

சொப்பன வீணைகளின்
சுந்தர கானங்களை
கேட்டுக் கேட்டே
பழகி விட்டதனால்
நிஜ வீணைகளின்
யதார்த்த ராகங்கள்
தேடுவாரற்றுத் தெருவில்
அலைகின்றன —
இல்லாத சொர்க்கங்களில்
இருக்கின்ற சுகங்களினை
படித்துப் படித்தே
பழகி விட்டதனால்
மானிடக் காவியங்கள்
நரகங்களாகி காலுக்குள்
நெரிகின்றன —

— சௌமினி —



## கார் மேகம்

வேலையற்ற
வாலிபர்களுக்காக
கண்ணீர் — சிந்தும்
மகாத்மா
பவனி வந்த
காரின் — பெறுமதி
இருநூறு
வாலிபரின் —
— வேலை வாய்ப்பை
விழுங்கி
நிற்கிறது.

— மு. த. யோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்தி முறுவல்

சண்டை என்றாலே என்ன வென்று தெரியாத சமாதான நாடான ஸ்விட்சர்லாந்து 40 கோடி டாலர் கொடுத்து அமெரிக்காவிடமிருந்து 100 போர் விமானங்களை வாங்கியுள்ளது.

நோன்பு நோர்ப்பவனையும் சண்டைக்கு இழுக்கும் குண்டர்கள் மலிந்த காலமிது... ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.

★ ★

ரஷ்யாவில் வெளியாகும் 'பிராவ்தா' தினசரிப் பத்திரிகை 110 லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றது.

''அங்கே ஒசிப் பத்திரிகை படிப்போர் இல்லாத காரணத்தால்தான் அவ்வளவு தொகையான பிரதிகள் விற்பனையாகிறது' என்கிறார் எமது 'சிரித்திரன்' ஆசிரியர்.

★ ★

காலஞ் சென்ற மர்மக்கதை எழுத்தாளர் அகதா கிருஸ்டியின் பிரபல நாடகமாகிய ''மவுஸ்டிராப்'' தொடர்ந்து லண்டனில் இருபத்திநான்கு வருடங்கள் நடை பெற்றுப் போன வருடம் அதனுடைய பதினாயிரத்தோராவது காட்சியைக் கொண்டாடியது.

முத்தமிழில் நாடகத்தமிழும் ஒன்று. இப்படியெல்லாம் பெருமை பெற்ற மொழியில் நாடகம் இன்று மேடையேற்றினால் 'கொம்பிளிமென்ட் டிக்கட் பெற்றவர்கள் மட்டுமே நாடகம் பார்க்க வருகின்றார்கள்' எனப் பெருமூச்சு விடுகின்றார் நடிகர் ஒருவர்.

★ ★

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் கிளிகளுக்கென ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே கிளிகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்து ''டிப்பிளமா''வும் வழங்குகிறார்கள்.

— சோவியத் செய்தி

''மனிதன் படித்துக் கிழித்த தொன்றுமில்லை இனி கிளி கிழிக்கப் போகிறது'' என முனகிறார் பண்டிதர் ஒருவர்.

★ ★

இந்தியாவில் மக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருட்களில் குறைந்தது நாலில் ஒரு பங்கு கலப்படம் செய்யப்பட்டது என்று ஆராய்ச்சி கூறுகின்றது.

— டைம்ஸ் ஆப் இந்தியா

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலையென்பார்கள். கலப்பட விஷயத்தில் சேய் நாடாகிய இலங்கை தாய் நாடாகிய இந்தியா போல்தான் என்கிறார் கலப்பட உணவால் நோயுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவர்.

★ ★

அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ. (C. I. A.)யில் 16500 பேர் வேலை செய்கின்றார்களாம்.

உலகை இன்று 6500 பேர் ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அந்த 16500 சி. ஐ. ஏ. அங்கத்தவர்களும்தான் என்கிறார் ஒரு பழுத்த அரசியல் ஞானி.

★ ★

முகத்தை மாற்றி அமைக்கக் கூடிய பிளாஸ்டிக் சேர்ஜன்கள் நிறையப் பேர் யப்பானிலும் பிரான்ஸிலும் இருக்கிறார்கள்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்னும் வாக்கியம் வருங்காலத்தில் செல்லுபடியாகாது. என்கிறார் ஒரு உளவு பொலிஸ்.

★ ★

கலிபோனியாவில் இப்பொழுது ரகசியமாகத் திருமணம் செய்து கொள்ள சட்டம் அனுமதிக்கிறது.

இச்செய்தியைக் கேட்டு காதல் திருமணம் செய்யப் போபவர் ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ.'' என்று பாடுகின்றார்.

★ ★

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் செக்ஸ் கல்வி போதிக்கப்பட்டால்தான் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றி பெற முடியும்.

— இலஸ்ட்ரேடட் வீக்லி

'செக்ஸ் பாடத்தைப் படிக்காமல் தன்னால் நூறு மார்க்ஸ் எடுக்க முடியுமென்கிறார்.' ஒரு காதல் மன்னன்.

★ ★

ஹைதரபாத் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் உள்ள சைக்கிள் ஸ்ராண்ட் கண்ட்ராக்டர் வருடம் லட்சம் ரூபாய் சம்பாதிக்கிறாராம்.

உத்தியோகமில்லாதவனைச் சுரண்டி, இலட்சாதிபதியாபவன் ஒரு புருஷ அவலட்சணமென்கிறார் உத்தியோக யோகமில்லாத ஒருவர்.

★ ★

அமெரிக்க விஞ்ஞானிகள் யாவரும் சேர்ந்தும் அமெரிக்க பாதுகாப்பு இலாகாவிலுள்ள கரப்பான் பூச்சிகளை அழிக்க முடியவில்லை.

அமெரிக்க விஞ்ஞானிகளால் கட்டிடங்களை அழிக்காதுமனிதனை அழிக்கும் 'நியூட்ரன்' குண்டுகளைத்தான் தயாரிக்க முடியும் பூச்சி புழுக்களை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புனித யூதாதேயு ஆலயம்

அரியாலை — யாழ்ப்பாணம்.

**திருவிழா 28 ஐப்பசி, 1977.**

19-10-77 புதன்கிழமை தொடக்கம்
27-10-77 வெள்ளிக்கிழமை வரை
மாலை 6 மணிக்கு ஆராதனைகள் நடைபெறும்.

28-10-77 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு

**திருநாட்பூசை**

குறிப்பு: வருடத்தின் சித்திரை மாதக் கடைசி ஞாயிறும், ஐப்பசி 28-ந் திகதியும் திருநாள் கொண்டாடப்படும்.

பங்குத் தந்தை



வாழ்வு வளம் பெற

## 'எண் சோதிடம்'

காட்டும் பாதையைக் கடைப்பிடியுங்கள்.

விலை: ரூபா 2-00

ரூபா 2-00 பெறுமதியான தபாற், காசுக்கட்டளை அனுப்பிப் பெறுங்கள்.

ஆசிரியர்;

ஆ. சிவராசா
மக்கள் வங்கி,
ஊர்காவற்றுறை.



**ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்**
**மோட்டார் உதிரிப்பாக விநியோகஸ்தர்கள்**

*

**களனி ரயர் ரியூப் சகல அளவுகளிலும்**
**விற்பனைக்கு உண்டு.**

*

# எஸ். சிவகடாட்சம் அன் கோ

**இல: 2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**Exide Battaries, Kelani Tyres & Tubes**

DISTRIBUTORS FOR

**Sri Lanka State Trading (General) Corporation**

(MOTOR SPARES)

# S. SIVAGADADCHAM & CO.

No: 2, Stanly Road, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம்: பி. கியூ 35/000

ஓவிய உலகில்
அவள் ஒரு
காவிய நூல்



அழகை ஆராதனை செய்பவர்கள் தமது
சித்திரத் தையல்வேலைகட்குப் பாவிப்பது
''முயல் மார்க் நூலே''

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி,.

கொழும்பு - 12.

122, நாவலர் வீதி, சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 122, நாவலர் வீதியிலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org